
அதிபர்,
யா/சுன்னாகம் நாகேஸ்வரி
- வித்தியாலயம்

# மத்திய தீபம்

கற்பவை கற்றுக் கற்றாங்கு ஒழுகு




யா/இணுவில் மத்திய கல்லூரி.

1998

இணுவில் மத்திய கல்லூரியின் ''மத்திய தீபம்''
புத்தாண்டில் புதுப்பொலிவுடன் மலர இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

# பெஷன் ஹவுஸ்

## எம்மிடம்



- ★ அலுமினியம்
- ★ எவர்சில்வர் பாத்திரங்கள்
- ★ அழகு சாதனப் பொருள்கள்
- ★ சூட்கேஸ்
- ★ விளையாட்டுப் பொருள்கள்

யாவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

## பேஷன் ஹவுஸ்

203(65), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# மத்திய தீபம்

மலர் 1 | 1998 | இதழ் 1

யா/இணுவில் மத்திய கல்லூரி
J/INUVIL CENTRAL COLLEGE
கற்பவை கற்றுக் கற்றாங்கு ஒழுகுக

## யா / இணுவில் மத்திய கல்லூரி

இணுவில், சுன்னாகம்.

## மலர்க்குழு

திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை

திரு. ச. சர்வேஸ்வரன்

திருமதி பா. ஜெயராசா

திருமதி த. மகாலிங்கம்

செல்வி ஞா. செல்லையா

செல்வி சி. யோகேஸ்வரி

## விளம்பர உதவி

திரு. செ. இலகுநாதன்

திரு. இ. தேவமனோகரராசா

திரு. வி. பரஞ்சோதி

திரு. ம. உதயகுமாரன்

திரு. சு. சிவகுமாரன்

# எங்கள் அதிபர்



திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்,
பொதுப் பயிற்சி, அதிபர் தரம் I

# அதிபரின் வாழ்த்து

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றை யவை" — குறள்

இவ்வுலகில் என்ஞான்றும் எல்லோராலும் அரிதின் முயன்றும் தேடப்படவேண்டியது கல்விச் செல்வமேயாகும். ஏனைய செல்வங்கள் யாவும் பிறரால் நினைப்புழிக் கவரக் கூடியன, அழிக்கக் கூடியன. கல்விச் செல்வமோ எவராலும் அழிக்கப்படக் கூடியதல்ல மேலும் மேலும் வளர்ச்சியடையும் தன்மையது.

இத்தகைய உயர் செல்வத்தினைப்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இணுவில் கிராமத்தின் முன்னோர்களால் அமைக்கப்பெற்று விளங்கிய சைவமகாஜனா வித்தியா சாலையையும், அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலையையும் ஒன்றிணைத்து "இணுவில் மத்தியகல்லூரி" என்ற பெயருடன் 1992-06-30 ஆந் திகதி தொடக்கம் மிளிர்வது எமது கல்லூரி.

கல்லூரியாக இணைக்கப் பெற்றபின் வளர்ச்சிப் பாதையில் வியத்தகு வகையில் பல் துறைகளிலும் மாணவர்கள் முன்னேறி வருவது கண்கூடு. அத்துடன் கல்லூரிக்குரிய வளங்களும் அபிவிருத்தியடைந்து வருகின்றன.

மாணவர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு வளர்ச்சிகளுக்கு உந்துசத்தியாக கல்லூரியின் செயற்பாடுகள் யாவும அமையவேண்டும். அதற்கு வேண்டிய களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது கல்லூரிச் சமூகத்தின் இன்றியமையாத கடமையாகும்.

நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாய மாணவச் செல்வங்களின் பண்பாடு, ஒழுக்கம், கலாசாரம், நடத்தைக் கோலங்கள் என்பவற்றையெல்லாம் சீர்மைப்படுத்தும் காலம் கல்லூரியில் கற்கும் காலமேயாகும். இதனையுணர்ந்து செயற்படுவது ஆசிரியர், பெற்றோர் கடனாகும்.

இவ்வழியிலே இணுவில் மத்திய கல்லூரிச் சமூகம் இற்றைஞான்று மிக்க கூர்மையுடன் செயற்பட்டுவருவதை இட்டு நாம் பெருமைப்படலாம். மேலே குறிப்பிட்டவற்றை நிறைவுடன் முன்னெடுப்பதற்குரிய ஒரு தூண்டு கோலாக அமைகின்றது. முதன் முறையாக வெளியிடப்படும் "மததியதீபம" என்னும் சஞ்சிகை வெளியீடு.

இக்கன்னி வெளியீட்டில் மாணவர்களின் ஆக்கங்களும், ஆசிரியர்களின் படைப்புகளும், கல்லூரியின். சில சிறப்புக்களும வெளிக கொணரப்பட்டுள்ளன.

"அறையும் ஆடரங்கும் மடப்பிள்ளையும

தறையிற் கீறிடில் தச்சருங்காய்வரோ ?" என்ற கம்பன் கூற்றுக்கமைய கல்லூரியின் முதல வெளியீட்டினை உவப்புடன வரவேற்போமாக.

இம்மலர் வெளிவருவதற்கு முன்னின்றுழைத்த அத்தனை பேருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் கல்லூரிச் சமூகம் தொடர்ந்தும சஞ்சிகைகளை வெளியிடவேண்டுமென வாழ்த்தி அமைகின்றேன்

மு. திருஞானசம்பந்தபிள்ளை
அதிபர்

இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில், சுன்னாகம்.

# வாழ்த்துச் செய்தி



யா / இணுவில் மத்திய கல்லூரியைச் சார்ந்த கல்விச் சமூகம் 'மத்திய தீபம்' எனும் சஞ்சிகையை முதல்முதலாக அச்சிட்டு வெளியிடும் கன்னி முயற்சியைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அது மட்டுமல்லாமல் காலாகாலம் மலர்ந்து அறிவொளி பரப்பி நறுமணம் வீச வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

கல்வி சார்ந்த சமூகத்தினது பல்வேறுபட்ட ஆற்றல்களும் ஒன்று திரண்டு ஆக்கம் பெற்று திசைகாட்டும் கலங்கரை விளக்காக இச் சஞ்சிகை திகழவேண்டும். எழுதுவதினால் வாசிப்பதினால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான் என்ற வாக்கிற்கு ஊன்றுகோலாக அமையவேண்டும். இன்று எமது கல்வி சார்ந்த சமூகத்தில் பல ஆற்றல் கொண்டவர்கள் இலைமறை காய்களாக உள்ளனர். இச் சஞ்சிகை வெளியீடு அவர்களுக்கும் துணை போவதோடு மொழித்திறன் விருத்திக்கும் அடிநாதமாகத் திகழவேண்டும்.

நீண்டகால இடைவெளிக்குப்பின் பல பாடசாலைகளில் சஞ்சிகை வெளியீடு தொடர்பான முன்னெடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தவேளையில் யா/இணுவில் மத்திய கல்லூரி தனது அரவணைப்பிலுள்ளவர்களது கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்படுத்திக் கொடுக்கும் இச் சந்தர்ப்பத்தையும் ஆர்வத்தையும் ஊக்கப்படுத்தி, வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.


வீ. இராசையா
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.

# வாழ்த்துரை

இணுவில் மத்திய கல்லூரி வெளியிடும் 'மத்தியதீபம்' மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியின் பரிணாம வளர்ச்சியையும், அதன் தற்காலப் போக்கையும், அதனடிப் படையில் இக் கல்லூரி அடைந்திருக்கும் வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் வகையில் கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்களைக் கொண்டு இம் மலர் வெளிவரவேண்டும்.

இன்று கல்வியானது அறிவியலைத் தேடும் ஒரு மார்க்கமாக மட்டுமன்றி, சமூகத்தின் சகல துறைகளையும் ஊடறுத்துச் செல்லும் ஒரு பெரு நதியாக வளர்ந்துள்ளது. அது சமூகப் பொறுப்பு, மனிதநேயம், ஆத்மீகம், சமூக ஏற்றத்தாழ்வு, நாட்டுவளர்ச்சி ஆகியவற்றில் வியத்தகு மாற்றங்களையும், தாக்கத்தையும் ஏற்படுத்த வல்ல ஓர் ஊடகமாகப் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

21ம் நூற்றாண்டில் கல்வித்துறையில் பாரிய மாற்றங்கள் செயற்படவிருக்கின்றன. புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப, இக் கல்லூரி மாணவர்களின் ஆக்கத்திறன் இம் மலர்மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது. 'மத்திய தீபம்' மலர் மலர்ந்து, இருள் நீக்கி, ஒளிபரப்ப எல்லாம் வல்ல பார்வதி - பரமேஸ்வரனின் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

பிரதேசச் செயலகம்,
உடுவில்
7-12-1998.

ஆ. மகாலிங்கம்
பிரதேசச் செயலாளர்,
வலிகாமம் தெற்கு,
உடுவில்.

## வாழ்த்துரை

இந்நாட்டிலே முகிழ்த் தெழுந்த இந்துக் கல்வி இயக்கத்தின் தளிராக, முத்தாக, மணியாக, வளர்ந்த அறிவாலயங்களுள் ஒன்றான சைவமகாஜனா, இன்று இணுவில் மத்திய கல்லூரி என்ற பெருங்கலைக் கோயிலாகப் படிமலர்ச்சி கொண்டுள்ளது.

அறிஞர்கள், சான்றோர்கள், அருங்கலை வல்லுனர்கள், அறச் செல்வர்கள், முதலாம் பல்திறத்தோர்க்கும் கல்விப் பெருஞ் செல்வப் பெருக்கைத்தரும் கலாநிலையமாகும் இக்கல்லூரியைத் தோற்றுவித்தோரும், இதன் வளர்ச்சியிலே வேராகவும் நீராகவும் இயங்கியோரும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கவர்கள்.

வாழையடி வாழையாக இக் கல்லூரியை வளர்த்தெடுத்த ஆசான்கள்,

அழியாப் புகழ்படைத்த அதிபர்கள். தூணாகவும், தூரிகையாகவும் இயங்கும் பெற்றோர்கள்,

நன்றியுள்ளம் கொண்ட மாணவர் அணியினர் அனைவரும் பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியவர்கள்.

சிறப்பாக இக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சியை ஒளிரும் மணியாக, ஓங்குயர் தீபமாக, நறுந்தமிழ்ச் சந்தனமாக, எத்திசையும் புகழ் மணக்கச் செய்த அதிபர், சைவப் பெரியார் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் வாழ்த்துக்கும் பாராட்டுக்குமுரியவர்.

தலைவர், இராமநாதன்
நுண்கலை நடனத்துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

சபா. ஜெயராஜா
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியல் துறை.

# வாழ்த்துரை



இணுவில் சைவ மகாஜனா மகா வித்தியாலயமும், இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் இணைந்தே 1992 ஆம் ஆண்டு யூலை 30ஆம் நாள் தொடக்கம் இணுவில் மத்திய கல்லூரி என்ற பெயருடன் இயங்க ஆரம்பித்தது. இதன் முதல் அதிபராக சைவப் புலவர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் விளங்கி வருகிறார். அன்று தொடக்கம் இக் கல்லூரி படிப்படியாக வளர்ச்சியடைந்து இப்பொழுது யாவரும் பாராட்டத்தக்க முறையில் இயங்கி வருகிறது. இக் கல்லூரியின் ஆசிரியர் ஆற்றும் தொண்டு போற்றத்தக்கது. சமய அறிவு மாணவருக்கு இன்றி அமையாதது. மாணவரின் சமய அறிவு விருத்தியடைவதற்கு ஏற்றசூழலில் இக்கல்லூரி அமைந்திருப்பதும் ஒரு விசேட அம்சமாகும். இக்கல்லூரி அதிபரும், ஆசிரியரும் இது நல்ல முறையில் நடைபெறப் பொறுப்பாக உள்ளனர். அவர்கள் தமது கடமையைத் திருப்திகரமாக ஆற்றி வருகிறார்கள் என எடுத்துக் கூறவேண்டியதில்லை. இக் கல்லூரி மாணவர்களின் அறிவும் ஒழுக்கமும் இதற்குச் சான்றுபகரும்.

ஒவ்வொரு மாணவனையும் பூரண வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தலே கல்வியின் குறிக்கோள் ஆகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதில் இக் கல்லூரி எல்லா வகையிலும் மிகவும் முயன்று வருகின்றது. அகவிருள் போக்குவதும் அறிவு. அறிவு என்னும் விளக்கு அகத்திருளைக் கடியும். அதுபோலப் பல இளம் உள்ளங்களில் உள்ள இருளைப் போக்கும் மெய்ஞ்ஞான விளக்காக இம் "மத்திய தீபம்" ஒளிபரப்ப வேண்டும். என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இன்றைய அசாதாரண சூழ்நிலையில் தாக்கங்கள் உள்ள போதிலும் ஓயாத பணியினால் கல்விசார் ஆசான்களின் பல படைப்புக்களையும், மாணவர் பலரது ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் இக்கன்னி வெளியீடான "மத்திய தீபம்" நன்கு பிரகாசிக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில், சுன்னாகம்,
07-12-1998

அ. தற்பரானந்தன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
உடுவிற் கல்விக்கோட்டம்

## பாராட்டுரை

எமது இதயத்தாலும் வாய்ச்சொல்லாலும் எந்நேரமும் பாராட்டிக்கொண்டே இருக்க வேண்டிய தகுதியைக் கொண்டவர் அதிபர் திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள். இணுவில் மத்தியகல்லூரியை தமது ஆளுமைத்திறனால் நன்மாணாக்கர் பலரை முன்னுக்குக் கொண்டுவந்த சிறப்பு இப்பெரியாரைச் சாரும்.

கல்விக் கடமையை கடவுட்பணியாக மேற்கொள்ளும் பெருமைமிக்க குடும்பத்தைச் சார்ந்தவர் இவர். நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவற்றை நிகர்க்கும் நல்லாசிரியர் தகமை இவரோடு கூடிப்பிறந்த சொத்தாகும். இதனை தனது ஆசிரியப் பணியிலும் அதிபர் பணியிலும் நிலைநாட்டி பெருமைபெற்றவர் இவர். கல்விச் சமூகத்தைக் கண்ணெனப் போற்றி உடன் ஆசிரியர்களை நன்குமதித்து மாணாக்கர்களை அரவணைத்து அறிவுரையை அருளுரையாகப் பகர்ந்து யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தை முதன்மையுறச் செய்த இப்பெரியார் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறவேண்டிய காலம் வந்துவிட்டது.

இது பதவிக்கால ஓய்வேயன்றி கற்பித்தலுக்கான ஓய்வு அல்ல.

எந்நேரமும் இவரை நாடிச்செல்கின்ற மாணவ சமுதாயத்தை உயர்வடையச் செய்யவேண்டிய கடமை இப்பெரியாரைப் போன்ற பலருக்குண்டு. கல்வி உலகுக்கு இவர் கலங்கரை விளக்கு என்பதை இந்த நாடே நன்கு அறியும்.

இத்தகைய ஞான விளக்கம் உள்ள, சேவை மனப்பக்குவம் வாய்ந்த ஒருசில அதிபர்களாவது நமது கல்விச்சாலைகளை உயர்வடையச் செய்ய முன்வரவேண்டும் என்பதே இந்நாட்டு மூதறிஞர்களின் பெருவிருப்பாகும்.

எனவே அதிபர் திருஞானசம்பந்தபிள்ளை அவர்களை வாழ்த்திப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்து அவர் கல்வி உலகுக்கு ஆற்றியசேவை மேலும் தொடரவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி,

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா
11-12-98

— உருவகம் —

இ. துரை எங்கரசு
புதிய அதிபர்

# எசமானும் தோழர்களும்


ஒரு குடியானவன் செல்வச் செழிப்போடு அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவனிடத்தே பெரிய செம்மறி ஆட்டுப்பட்டி இருந்தது. பட்டியின் பெருக்கமே அவன் செல்வத்துக்குக் காரணம். சிறு பற்றைக் காடும் அதனிடையே செழித்து வளரும் புற்களும் இவற்றின் உணவாக அயலிலேயே காணப்பட்டது. என்றும் பசுமையான நிலத்துக்கும் இவனே இன்று சொந்தக்காரனாகி விட்டான்.

செல்வம் பெருக நாகரிகமும் வளருவதாக எண்ணினான். தன் தொழிலை தான் செய்யக்கூடாது என எண்ணினான். தன் பிள்ளைகளை அயலிலுள்ள பட்டணத்துக்கு அனுப்பிப் படிக்க வைத்தான்.

தன் விசுவாசமான நாயை நம்பினான். ஆடுகளை மேய்த்து வரும் பாடங்களை, பயிற்சிகளை அதற்குக் கற்றுக் கொடுத்தான். இப்போது எசமான் மேய்க்கச் செல்வதில்லை. நாயே மேய்த்து வரப் பயிற்சி பெற்று விட்டது.

நன்றியுள்ள நாய் தன் கடமைகளை ஒழுங்காகவே செய்து வந்தது. ஆடுகளும் கொழுப்பாக வளர்ந்து வருவதைக் கண்டு எசமான் பூரித்துப்போனான்.

இரவில் தூங்கும் போது எசமான் நாய்க்கு தனக்குப் பக்கத்திலேயே படுக்கையும் வைத்துக் கொண்டான். நாய் தன் கடமையின் சாமர்த்தியத்தை எல்லாம்



வாயாரச் சொல்லி மகிழும். எந்த எதிரியும் கிட்ட அணுகாதபடி தான் காப்பாற்றி வருவதையும் சொல்லும். பேராபத்துக்களிலிருந்து ஆடுகளை மீட்ட கதைகளையும் சொல்லும். பெருமை படச் சொல்லும்.

எசமான் உள்ளம் பூத்துக் குலுங்கும். நாயைப் பெருமையோடு பார்ப்பான். தடவிக் கொடுப்பான். தான் உண்ணும் விதம் விதமான மாமிசங்களை அதற்கும் கொடுக்கும்படி எசமாட்டியைக் கட்டாயப் படுத்துவான். நாய்க்கு இப்போது நல்ல வேட்டை கிடைக்கிறது.

நாய்க்குக் கிடைக்கும் மரியாதையைக் கண்டு இப்போது ஆடுகள் பொறாமைப் படத் தொடங்கின, செல்வத்தை நாமல்லவா வழங்குகிறோம். எம்மைச் சுற்றி வரும் இவருக்கு ஏன் இவ்வளவு மரியாதை? எமக்கு இவர் என்ன செய்கிறார்? எசமானார் அல்லவோ இப்போது நாயாகக் குழைகிறார்; பறை நாய் முன்.

ஆடுகள் தமக்குள் ஆதங்கத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தன. எசமானை வெறுக்கவும் தொடங்கின. தங்கள் செல்வம் எசமானுக்கு நிலைக்கக் கூடாது எனவும் திட்டித் தீர்த்தன.

பெருமைகளைச் சுமக்க முடியாத நாய் இப்போது ஆடுகள் முன் தானே எசமான் எனக் காட்டிக் கொள்ளத் தொடங்கியது. துள்ளி நடக்கும் பாய்ந்து நடக்கும், குரைத்துக் காட்டும். ஓடி, ஓடி வித்தைகள் காட்டும். புதுப்புதுப் பாடங்களைக் கற்பிக்கவும் தொடங்கி விட்டது. இப்படிக் கடித்து உண், ஓடி ஓடிக் கடியாதே, சப்பி விழுங்கு, இரைபோடுவதை இனிமேல் தவிர், அசிங்கமாக உண்ணாதே. என்னைப் போல் குரைத்துப் பழகு.

தன் சொல்லைக் கேளாத ஆடுகளைத் தாக்கவும் தொடங்கியது. காதுகளைக் கடிப்பது, கால்களைக் கவ்வுவது, வாலைக் கடித்து இழுப்பது......

ஆடுகள் படிப்படியாக மிரளத் தொடங்கின. எசமானுக்குத் தமது முறைப்பாடுகளை சொல்லத் தொடங்கின. எசமான் விசுவாசமான நாயையே நம்பினார். ஆடுகளின் பொய்க் குற்றச் சாட்டுகளை என்னால் நம்பமுடியாது என்றார். பதிலுக்கு தன் தண்டனையையும் தவறாது கொடுக்கத் தொடங்கினார். இனிமேல் தங்கள் சொல் பலிக்காது என்று ஏங்கிய ஆடுகள் ஒரு முடிவுக்கு வந்தன.

கடாக்கள் போராளிகளாக மாறுவதென முடிவாயிற்று. இரகசியம் பலமாகப் பாதுகாக்கப்பட்டது. தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தன. மேய்வதில் மிக எச்சரிக்கையோடு செயற்பட்டன. தற்காப்புப் பயிற்சியையும் தமக்குள் கற்றன.

ஆடுகளைத் தாக்கும் போது அதன் பற்களில் சுவை ஊட்டும் இரத்தம் நாயைப் பல கனவுகள் காணச் செய்யும், கற்பனைகளில் மிதக்க வைக்கும். ஒரு ஆட்டைத் தனிமையில் அழைத்து ருசித்தால் என்ன என்ற பேராசை வலுவானது. திடீரெனப் பரீட்சித்தது. குட்டி அலறித் துடித்தது. கொம்பன் கடாக்கள் எதிரி முன் போராளிகளாகின. தாக்கத் தொடங்கின. குட்டியின் குடல் நாயின் வாயில் கௌவியபடியே எசமானை ஒரு முறை மட்டுமே அழைத்தது. இப்போது காடெல்லாம் பேரிரைச்சல். அதிர்ந்த காடு இன்னமும் சுயநிலைக்குத் திரும்பவில்லை.

விபரீதம் ஒன்று நேர்ந்து விட்டது. நன்றியுள்ள நாயின் அவலக்குரல் எசமானைத் திடுக்கிட வைத்தது. ஓடி வர வைத்தது. தொந்தி வயிறோடு குடல் நடுங்கி நின்றார். நாயும் உயிரோடு இல்லை. எதிரே இரண்டு கடாக்கள் மூசிய வண்ணம் இரைத்து நிற்பதைக் கண்டார். வீணான நம்பிக்கை விபரீதமான உண்மையை எசமான் உணர்ந்து கொண்டார்.

ஆடுகள் இப்போது சுயமாகவே மேய்கின்றன, சுகமாகவே வாழ்கின்றன. மேய்ப்பான் அவர்களுக்கு இனிமேல் தேவைப்படாது. ஏனெனில் ஆடுகள் இப்போது உலகை மேய்வதற்கு நன்கு கற்றுக்கொண்டு விட்டன.

(யாவும் கற்பனை)

# எங்கள் பிரதி அதிபர்



திரு. மு. சர்வேஸ்வரன்
விசேட பயிற்சி விஞ்ஞானம்,
அதிபர் தரம் III

# பிரதி அதிபர் வாழ்த்து

எமது கல்லூரி ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, இந்த வையகம் போற்றும் ஓர் உயர்ந்த அறிவாலயமாக வளர்ச்சி கண்டுள்ளது. இந்த வளர்ச்சியிலே பங்கு கொண்ட பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அதிபர்கள், ஆசிரியர்கள் என்றும் எமது இனிய பாராட்டுதல் களுக்கு உரியவர்கள்.

இணுவில் கிராமத்துக்கும் இந்த வலிகாமம் பிரதேசத்துக்கும் பெருமை சேர்க்கும் வகையிலே எமது மாணவர்கள் கோட்ட, வலயப் போட்டிகளிலும், மாகாண ஏன் அகில இலங்கைப் போட்டிகளிலும் கூட பல்வேறு வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

கலை, விஞ்ஞானம், உடற்கல்வி, அழகியல் போன்ற பல்வேறு துறைகளில் எமது மாணவர்களின் சாதனைகள் உயர்ந்த தரத்தினையும் மெச்சத்தகு பாராட்டுதல்களையும் ஈட்டியுள்ளன.

இந்த வெற்றிகளுக்கெல்லாம் பின்னணியாக அமைகின்ற எமது ஆசிரியர் குழாத் தையும், அதிபர் அவர்களையும் நான் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

எமது அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் ஓய்வுபெற்றுச் சென் றாலும், அவர் முன்னெடுத்து விடப்பட்ட கல்விப்பணிகளையும், கட்டடப் பணிகளை யும், மேம்பாட்டுப்பணிகளையும் நாமெல்லாரும் ஒன்றுகூடி முன்னெடுப்போம் என்ற உறுதியுடன் எனது வாழ்த்துக்களை நிறைவு செய்கின்றேன்.

ச. சர்வேஸ்வரன்
பிரதி அதிபர்

இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில்.

# மாணவர் சஞ்சிகை வெளியீடு
# மனமார்ந்த ஆசிகள்



மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் உந்துசக்தியாக விளங்குவது சஞ்சிகை.

சஞ்சிகை வெளியிடுவதன் மூலம் தன்னார்வமுள்ள சமுதாயத்தைத் தோற்றுவிக்கலாம்.

கல்லூரி அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களது நிர்வாக ஆற்றலால் இந்தக் கல்லூரி உன்னத நிலையை எய்திவருவதை பழைய மாணவர்களும், கல்லூரிச் சமூகமும் கண்டு வியந்து பாராட்டுகின்றது.

அவர் ஆரம்பித்து வைத்த சஞ்சிகைவெளியீட்டு முயற்சி மேலும் வளர்ந்துசெல்ல எனது மனமார்ந்த ஆசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணக்கம்.

இணுவில்.

செ. சோதிப்பெருமாள் J. P.
ஓய்வுபெற்ற அதிபர்

## மலரின் நுழைவாயில்

மகிழ்ச்சியோடும், கல்விச் சாதனைகளோடும்' 'மத்தியதீபம்' மலரை வெளியிடுவதில் நாம் பெருமையடைகின்றோம்.

எமது மாணவர்களின் படைப்பாற்றலும், புத்தாக்கத்திறன்களும், வெளியீட்டுத் திறன்களும் இந்த மலரை அலங்கரிக்கின்றன. கல்லூரியின் கலைத்திட்டச் செயற்பாடுகளும், இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகளும் எழுத்தோவியங்களாகத் தரப்பட்டுள்ளன. தித்திக்கும் தேன்றமிழ் ஆக்கங்களும், சுவைமிகு ஆங்கிலப் படைப்புக்களும் இம் மலருக்கு அழகு சேர்க்கின்றன.

யா / இணுவில் மத்திய கல்லூரியின் சிறப்பிகளாக விளங்குகின்ற அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்குழாத்தினர், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் முதலியோரின் நிழற் படங்களைத் தாங்கி வெளிவரும் இந்தப் படைப்பு, இக் கல்லூரியின் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் ஆவணமாக அமைகிறது.

இந்த மலரை வெளியிடவேண்டுமென்ற பேரூக்கத்தைத் தந்த கல்லூரி அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களுக்கும், பிரதி அதிபர் திரு. ச. சர்வேஸ்வரன் அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மலர்க் குழுவினரின் நன்றிகள்.

உங்கள் கைகளில் தவழ்கின்ற இந்த அழகிய மலர் உருவாவதற்குப் பலவற்றாலும் ஒத்துழைத்த பெற்றோர், நலன்விரும்பிகள், பழையமாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

இந்த மலரை அணிசெய்வதற்கு உரிய வாழ்த்துரைகளும், பாராட்டுகளும் வழங்கிய சான்றோர்க்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகர்களுக்கும், இதனை அழகுற அச்சிட்ட பாரதி அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

இவ்வாறான அழகுக் கல்வி மலர்கள் ஒவ்வோர் ஆண்டும் வெளிவந்து, இணுவில் மத்திய கல்லூரி அன்னையைச் சிறப்பிக்க வேண்டும் என்ற எமது விருப்பத்தையும் இச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மலர்க்குழு

## 'மத்திய தீப' மலரே வாழ்க

வருக வருக மத்திய தீபமாம்
திருவே வருக திறவோய் வருக
அருவாய் உருவாய் அறிஞர்க் கறிவாம்
பொருளாய் விளங்கு விஸ்வ நாதக்
கடவுள் அருளால் கவினொடு வருக
திடமுடன் நற்கலை பெருகியே வருக
திருஞான சம்பந்த பிள்ளை அவையினில்
அருளொளி பெருக்கியே அம்மா வருக.
மத்திய தீப மலர்க்கொடி வாழக
உத்தமர் மனதினில் உதித்தாய் வாழ்க
இணுவையர் செல்வ மகளே வாழ்க
கணுவில் முற்றிய கரும்பே வாழ்க
கலைவளம் பெருகக் கலைமலரே வாழ்க
துலைபோல் நீதி துலங்கிட வாழ்க
அதிபர் ஆவலில் மலர்ந்தாய் வாழ்க
மதிநலஞ் சான்ற ஆசார் பணியினில்
வளர்ந்தாய் வாழ்க வளமுடன் வாழ்க
உளஞ்சால் வள்ளலார் போற்றிட வாழ்க
மத்திய தீபச் சுடர்க்கொடி வாழ்க
நித்தியம் நித்தியம் நிறைந்தே வளர்க
அன்பர்கள் நண்பர்கள் ஆசிகள் தந்திட
நன்னெறி பெருக்கியே நாளும் வளர்க
வாழிய வாழிய தீபமலர் வாழியவே.

மங்களம்

**பண்டிதை திருமதி தனலட்சுமி மகாலிங்கம்**



கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
செயற்குழு - 1998

# எங்கள் கல்லூரி

வாழ்க்கை என்பது வளமாக வாழ்தல்; வாழ்வாங்கு வாழ்தல் என அமைகின்றது. பொருள், கீர்த்தி, புகழ் ஆகிய பல்வேறு செல்வங்களுடன் இணைத்து இசைபட வாழ் தலை வளமாக வாழ்தல் என்கின்றனர். கற்றோர்க்கும் கல்லாதோருக்கும் கூட இவ் வாழ்வு கிடைக்கிறது. ஆனால் அகத்தூய்மையுடன் வாழ்வதற்கு கல்வி, அறிவு வேண் டப்படுகின்றது. இவற்றினை ஏற்படுத்திக் கொடுக்கின்ற வடிகாலாக பாடசாலைகள் விளங்குகின்றன. அந்தவகையில் எத்தனையோ பெரியவர்களை உருவாக்கிவிட்டு இன்று வரை புகழ்பூத்தவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இணுவில் மத்திய கல்லூரி எமது ஊரில் அமைந்துள்ளமை நாம் எல்லோரும் செய்த தவம் என்றே கூறிவிடலாம்.

அன்று தொட்டு இன்று வரை மாணவர்களின் முன்னேற்றத்திற்காக எமது மத் தியகல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆற்றிய சேவை மகத்தானது. குறிப்பாக மாண வர்களது கல்வி, அதற்கப்பால் நாட்டியம், இசை, சித்திரக் கலைகளில் முதன்மை பெற்று இருப்பதற்கு இவர்களே அடிக்கல் நாட்டியவர்கள். ஆரம்பப் பிரிவு மாணவர்க ளிற்கான கல்வி மிகவும் உறுதியாகவும், சிறப்பாகவும் கற்பிக்கப்பட்டு வருவது அண்மைக் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களது தொகை அதிக ரிப்பில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இணுவில் மத்திய கல்லூரி யில் க. பொ. த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பித்து சொற்ப காலங்களே கடந்துவிட்டன. ஆனால் குறிப்பிடத்தக்க மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருக்கின்றமை குறிப் பிடத்தக்க ஒரு விடயமாகும்.

பாடசாலை அபிவிருத்தியில், கல்வி அபிவிருத்தியில், விளையாட்டுத்துறை, கலை, இலக்கிய அபிவிருத்தியில் இதுவரை காலமும் இருந்த அதிபர்கள் தம்மால் இயன்ற வரை உழைத்து வெற்றிகண்டிருக்கின்றார்கள். பாடசாலைக்கு போதியளவு கட்டிடவசதிகள் இல்லாத ஒரு காலமும் இருந்தது. ஆனால் இன்று அத்தகைய பிரச்சனை ஏதும் இல் லாத வகையில் போதியளவு வசதிகள் இருக்கின்றது. இந்தக் கல்லூரி மாணவர்கள் விளையாட்டுத்துறையில் மிகுந்த ஈடுபாடு உடையவாகள். எனினும் அவர்களிற்கு சொந் தமாக விளையாட்டு மைதானம் இல்லை என்ற குறையும் விரைவில் நீங்கிவிடும் என்ப தனை இத் தருணத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

எமது இந்தப் பாடசாலை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கின்றமை எமக்கெல்லாம் மகிழ்ச்சிக்குரிய விடயம் எனினும் எதிர் காலத்தில் இன்னும் மேலோங்கி வளர்ந்து அகில இலங்கை ரீதியில் முத்திரை பதிக்க வேண்டும். அதற்கு அதிபர்கள் ஆசிரியர்கள், மாண வர்கள், எல்லோரும் ஒன்றிணைந்து முழுமூச்சுடன் செயற்படவேண்டும்.

இணுவில் செ. இலகுநாதன்
பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலர்
பழைய மாணவர் சங்கப் பொருளர்

# முன்னேற்றப் பாதையிலே.......

இணுவில் மத்திய கல்லூரியில், முதன்முதல் 'கல்லூரி மலர் , அச்சேறி மலர்கிறது. பெரு மகிழ்ச்சி அடைகிறோம். கல்லூரியின் செயற்பாடு ஆவணப்படுத்தப்படுகிறது.

இருபாடசாலைகள் — இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை — இணுவில் கிறீஸ்த்தவ மிசன் பாடசாலை இணைவை கண்டு, 30-6-92 இல் இணுவில் மத்திய கல்லூரியாக முகிழ்த்தது. இவ்விணைப்புக்குப் பெற்றோர், கிராமப் பெரியோர், ஆசிரியர்கள், மற்றும் சான்றோர் பலர், பெருமுயற்சி அயராது எடுத்து, வெற்றியும் கண்டனர்.

தற்போது கல்லூரி அதிபராக இருக்கும் உயர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளையின் பொற்காலத்திலேயே இந்நிகழ்வு நடைபெற்றது. இவருடைய வழி நடத்தலில் கல்லூரி கண்ட மாபெரும் வளர்ச்சிகள் அபரிதமானவை. உரிய காலத்தில் எல்லாம் ஒழுங்காக நடந்தன. மாணவர் தொகை கூடியது. பௌதிக வளங்கள் பெருகின. கல்வி தனது விசாலமான பரப்பை எட்டியது புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் முதன்மை இடம்கிடைத்தது. கல்விச்சாதாரண பரீட்சையில் பலர் சிறப்பாகத்தேறினர். சர்வகலாசாலைக்குப் பலர் தெரிவாகினர். விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களின் திறமை வெளிப்படுத்தப்பட்டது. பேச்சு, சங்கீதம், நாடகம், சித்திரம், சாரணியம், இன்னோரன்ன பலதுறைகளிலும் மாணவர் சாதனை கொடிகட்டிப் பறந்தது. நாட்டில் பல நற்பிரஜைகள் உருவாகுகின்றனர்.

சீரான திறமையான அதிபரின் ஆசிரியர்களின் கூட்டு முயற்சியில் இக்கல்லூரியின் முன்னேற்றம். நாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இணுவில் வாழ் மக்கள் இவர்களுக்கு என்றும் நன்றிக்கடன் பட்டவர்கள்.

இக்கல்லூரியில் கற்றல், கற்பித்தல் உயர்நிலையில் ஆராதனையாகி விட்டது. பிள்ளைகள் பெற்றோர், ஆசிரியர் அரவணைப்பில், கிராமச் சூழலில், ஒழுக்க சீலர்களாக உடல் - உள நலம் பெற்று கல்வியில் பீடு நடை போடுகின்றனர். வரும் காலத்தில் வள்ளுவர் சிந்தனைக்கமைய தாம் சார்ந்த துறைகளில் வல்லவர்களாகவும் நல்லவர்களாகவும் இருப்பர்.


சைவமும் தமிழும் தழைக்க வந்த எம் முதலாம் தர அதிபர் - சம்பந்தனார் 24-12-98இல் ஓய்வு பெறுகிறார். அவர் ஆசிரிய சேவையில் ஓய்வு பெற்றாலும் அவர் அலங்கரிக்கப்பட்ட பணிகள் பல உள. இப் பெருமகனாரை ஆண்டவன் அருள் வேண்டி நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.

புதிதாக வரும் அதிபரை அன்புடன் வரவேற்கிறோம். "தன்கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்குக்கமைய, கூட்டு முயற்சியில் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தி, கல்லூரி வளர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டுகிறோம். எல்லாம் வல்ல ஆண்டவன் எங்களை வழிநடத்துவாராக.

நன்றியுடன்

இணுவில்

த. கைலாசநாதன்
பழைய மாணவன்



கல்லூரி அபிவிருத்திச் சங்கம்
செயற்குழு - 1998

## யா / இணுவில் மத்திய கல்லூரி
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 1998

| | |
|---|---|
| தலைவர்: | திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை |
| உபதலைவர்: | திரு. S. சர்வேஸ்வரன் |
| செயலாளர்: | திரு. செ. இலகுநாதன் |
| உபசெயலாளர்: | திரு. வி. பரஞ்சோதி |
| தனாதிகாரி: | திரு. ம. உதயகுமாரன் |
| நிர்வாகசபை உறுப்பினர்கள்: | க. ஸ்ரீபாலசண்முகம் |
| | செ. சர்வேஸ்வரன் |
| | சி. விஜயகுமாரன் |
| | தா. குமாரகுலசிங்கம் |
| | அ. தம்பிராசா |
| | வ. பூலோகசிங்கம் |
| | சு. மகேஸ்வரலிங்கம் |
| | திருமதி இ. நடேசபிள்ளை |
| | திருமதி சி. நித்தியலட்சுமி |
| | திருமதி ர. ரஞ்சினி |
| | திரு. இ. தேவமனோகரராசா |
| | திரு. சு. அருளானந்தம் |
| | திருமதி சி. விநாயகமூர்த்தி |
| | செல்வி ச. சுவர்ணா |

## யா / இணுவில் மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - 1998

| | |
|---|---|
| போசகர்: | திரு. செ. சோதிப்பெருமாள் |
| தலைவர்: | திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை (அதிபர்) |
| உபதலைவர்: | திரு. த. கைலாயநாதன் |
| செயலாளர்: | திரு. சி. கருணாமூர்த்தி |
| உபசெயலாளர்: | திரு. வி. பரஞ்சோதி |
| பொருளாளர்: | திரு. செ. இலகுநாதன் |
| உபபொருளாளர்: | திரு. செ. ஜெயகாந்தன் |
| நிர்வாகசபை உறுப்பினர்: | திரு. நா. சிவஞானம் |
| | திரு. சி. ஸ்ரீஸ்கந்தராசா |
| | திருமதி ர. ரஞ்சினி |
| | திரு. இ. கதிர்காமநாதன் |
| | திரு. இ. தேவமனோகரராசா |
| | திரு. இ. கணேசதாசன் |
| | திரு. சு. சிவகுமார் |
| | திரு. செ. சர்வேஸ்வரன் |
| | திருமதி சி. நித்தியலட்சுமி |
| | திரு. த. சந்திரகாசன் |

# மலரின் இதழ்கள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| பாரதியார் | — | உ. ரவிசங்கர் | 9 |
| யானை | - | செ. அனுபா | 9 |
| குடையின்சுயசரிதை | — | அ. யசோதா | 9 |
| கிராமிய நடனங்கள் | — | வி. தனுசியா | 10 |
| இசையின் தோற்றமும் பெருமையும் | — | த. மாலதி | 12 |
| இலங்கையின் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி | — | சோதிலிங்கம். கோகிலன் | 13 |
| இன்டர்நெட் | — | மகாலிங்கசிவம். குறிஞ்சில்குமரன் | 15 |
| மனை அலங்காரம் | — | ந. கோகிலவதனி | 15 |
| அற்புதமான அஜந்தா ஓவியங்கள் | — | கா.ரமேஷ் | 16 |
| எயிட்ஸ் | — | சோமசுந்தரர். கிருஷ்ணவேதா | 18 |
| நூலகம் | — | சுப்பிரமணியம். முகுந்தன் | 19 |
| தலவரலாறு (திருக்கேதீச்சரம்) | — | தவராசா. நவநீதன் | 20 |
| திருவாசகத்தின் சிறப்பு | — | பா. அரவிந்தன் | 23 |
| ஐ. நா. மறுசீரமைப்பு | — | தயாபரமூர்த்தி. ஹரிசாந்தன் | 25 |
| சனத்தொகைக் கோட்பாட்டு பகுப்பாய்வு | — | ஞானானந்தம். ஞானசொரூபன் | 26 |
| தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறம் | — | இராஜேஸ்வரன். விஜிதா | 28 |
| இலங்கையில் பரதக் கலை | — | சோ. சோமலோஜினி | 30 |
| பணவீக்கம் | — | ந. யோகரூபன் | 32 |
| ஆசிரியர் | — | உ. தனஸ்ரீ | 36 |
| எம் இணுவை | — | ப. ரமேஸ்கண்ணா | 37 |
| மனவோட்டம் | — | பாலசுப்பிரமணியம். ஐங்கரன் | 38 |
| My Self | — | Jasotha Alaganantham | 39 |
| My Friend | — | S. Gowreeshan | 39 |
| My Sister's doll | — | K. Partheepan | 39 |
| Our Principal | — | P. Ariram | 40 |
| The Coconut tree | — | T. Sugithan | 40 |
| My Class room | — | S. Rakulan | 40 |
| My Hobby | — | S. Sivasajeetha | 41 |
| Some hobbies that I Enjoy | — | Sivakaran | 41 |

| | | |
|---|---|---|
| My First ride on a bicycle | — K. Selvananthini | 42 |
| The Bamboo | — T. Sujitha | 43 |
| A Journey by boat | — V. Jasothini | 44 |
| A Visit to a Dentist | — V.Vinothini | 44 |
| Role of English in Sri Lanka | — S. Sumithira | 45 |
| எமது மன்றங்கள் | | 47 |
| க. பொ. த உயர்தர மாணவர் மன்றம் | | 47 |
| இந்துமா மன்றம் | | 47 |
| தமிழ்ச் சங்கம் | | 48 |
| விவசாய விஞ்ஞான மன்றம் | | 48 |
| சங்கீத மன்றம் | | 49 |
| வணிக மன்றம் | | 49 |
| English Union | | 50 |
| எமது விளையாட்டுக் குழுக்கள் | | 50 |
| 1998ல் மாணவர் சாதனை | | 54 |
| பயிர்ச்செய்கையில் தோன்றும் பிரச்சனைகள் | — வே. திருச்சபேசன் | 55 |
| எங்கள் கல்லூரி | — சுப்பையா. சிவகுமாரன் | 58 |
| எனது நோக்கில்... | — திரு. ம. உதயகுமார் (ஆசிரியர்) | 60 |
| A tribule to an ideal Principal | — Miss G. Chelliah Sp. Trd (Eng) (Retired Teacher) | 61 |
| கல்லூரி வள ஆளணி 1998 | | 63 |

# பணிவான வேண்டுகோள்

அன்பான பெற்றோர்களே!
பழைய மாணவர்களே!
நலன் விரும்பிகளே!

இணுவில் கிராமத்தின் மத்தியிலே கிழக்குக்கும் மேற்குக்கும் நடுநாயகமாக மிளிர்கின்ற இணுவில் மத்திய கல்லூரி 1991 ஆம் ஆண்டு கல்லூரியாக ஒன்றிணைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

கல்லூரி மாணவர்கள் முறைசார் கல்வித்துறையிலும் இணைப்பாடவிதான முயற்சிகளிலும் துரித முன்னேற்றம் பெற்று வருகின்றனர்.

பரீட்சைப் பெறுபேறுகள் முதல் ஏனைய கோட்டமட்ட வலயப் போட்டிகளிலும் மாணவர்கள் முன்னிலையில் உள்ளனர். ஆண்டுதோறும் பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் என்பனவற்றினை மேலும் விருத்திசெய்ய எமது கல்லூரிக்கு ஒரு விளையாட்டு மைதானம் அத்தியாவசியம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்கள்.

விளையாட்டு மைதானம் ஒன்றினைப் பெறும் முயற்சிகள் ஏலவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன. குறித்த விளையாட்டு மைதானத்தைக் கல்லூரிக்குச் சொந்தமாக்குவதற்கும் ஏனைய வசதிகளைச் செய்து கொள்வதற்கும் தங்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து இயன்றளவு பண உதவியினை வேண்டி நிற்கின்றோம்.

*"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!*
*அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்!"*

என்பதற்கமைய எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒல்லும் வகையால் உதவுமாறு வேண்டி நிற்கின்றோம்.

குறிப்பு: பணத்தினைச் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில்
யா/இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு நிதியம்
சேமிப்பு கணக்கு இல: **INS 1183**
என்பதில் நேரடியாக வைப்பிலிடலாம்.

நன்றி.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
நலன் விரும்பிகள்.

இணுவில்.

## பாரதியார்

பாரதியார் தமிழ் நாட்டிலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவரின் தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் இலக்குமி அம்மாள். அவர் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அவற்றில் தமிழை மிகவும் விரும்பினார். தமிழிலே பல பாடல்களைப் பாடினார். பிள்ளைகளுக்காகப் பல பாப்பாப் பாட்டுக்களைப் பாடினார். புதிய ஆத்திசூடி இயற்றினார் அவரது முழுப் பெயர் சுப்பிரமணியபாரதியார்.

உ. ரவிசங்கர்
ஆண்டு 3' 'A''

---

## யானை

யானை காட்டில் வாழும் மிருகம். அது மற்றைய மிருகங்களிலும் பெரியது. அதன் கண்கள் மிகச்சிறியவை. அதன் காதுகள் சுளகுபோல் இருக்கும். யானையின் மூக்கு நீண்டு வளைந்திருக்கும். யானையின் மூக்கு தும்பிக்கை எனப்படும். அது தும்பிக்கையினால் நீரை உறிஞ்சும். யானை மரங்கள் போன்ற பாரங்களைத் தூக்கும். யானை மிகவும் பலமுடையது சிறிய ஊசியையும் தன் தும்பிக்கையினால் எடுக்கும். யானை பவனி வரும. யானை இலை, தழை, கரும்பு ஆகியவற்றை உண்ணும். யானைக்கு நான்கு கால்கள், இரண்டு கண்கள் உண்டு யானையின் வால் குஞ்சம் போன்றது.

செ. அனுபா
ஆண்டு 3 ''B''

---

## குடையின் சுயசரிதை

நான் வாழ்ந்த காலத்திலும் மானிடனுக்கு மகத்தான சேவையாற்றினேன். இன்று எனது மரண காலத்திலும் என் உடலை அவர்களுக்கு தியாகம் செய்யவே எண்ணியுள்ளேன். ஆனால், என்னையோ அவர்கள் தன்னந்தனியே கன்னங்கரிய இருட்டறை ஒன்றில் கைதியைப்போலத் தள்ளிவிட்டிருக்கிறார்கள்.

எனது அன்றைய நாள்களை எண்ணிப் பார்க்கிறேன். எனது இளமைக் காலம் எவ்வளவு மகிழ்ச்சியான நாள்களாக இருந்தன. பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகளுடன் குதூகலமாக வாழ்ந்தேன். இன்றோ, என்கதை மாறிவிட்டது. என் கடந்தகால இனிய நினைவுகளுடன் இறந்தும் இறவாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நான் பிறந்த ஊர் இத்தாலி. எனது நிறம் நீலம். ஒருநாள் ஒருகனவான் என்னையும், சகோதரர்களையும் ஒரு வாகனத்தில்

ஏற்றிக்கொண்டுபோய், பீலோனா என்னும் நகரத்தில் ஒரு வியாபாரிக்கு விற்றார். அந்த வியாபாரி ஒரு பெட்டியினுள் என்னையும், சகோதரர்களையும் பூட்டி வைத்தார். அதன் பின், இலங்கையின் சுற்றுலாப் பயணியான ஓர் அழகான பெண் என்னை விரும்பி, வாங்கினார். அப்பெண்மணி தனது அருமை மகளின் பிறந்தநாளுக்கு என்னைப் பரிசாகக் கொடுத்தார். அந்தப் பெண்பிள்ளை சாளினிக்கு என்னில் கொள்ளை ஆசை. கண்ணை இமை காப்பது போல என்னைக் காத்துவந்தாள்.

ஒரு நாள் சாளினி பாடசாலை மாணவர்களுடன் சுற்றுலா சென்ற அந் நாளில் அகோர வெய்யில் எறித்தது. அந்தக் கொடிய வெய்யிலில் நீண்ட நேரம் என்னைப் பிடித்தபடியே சாளினி சென்றாள். வெப்பத்தின் தீவிர தாக்குதலுக்கு உள்ளான எனது மேனி இடையிடையே வெளிறி வந்தது. நீல நிறமாக இருந்த எனது புறவுருவம் வெள்ளையும், நீலமும் கலந்த ஒரு நிறமாக மாறிவிட்டிருந்தது. அதன் பின் சாளினிக்கு என்மீதிருந்த அன்பு சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிவிட்டது. அவள் என்னைத் தூக்கி ஒரு மூலையில் போட்டுவிட்டாள். நான் இளமையாக இருந்தபோது எழிலும் என்னுடன் இருந்தது. சாளினியின் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் அனைவரும் என்னைச் சுட்டிக்காட்டி கதையாத நாள்களே இல்லை எனலாம்.

ஆனால், இன்றோ என்னை எவரும் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. புற உலகம் தெரியாத ஓர் இருட்டில் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்தப் பாழாய்ப் போன வெய்யிலில் அன்று நானும் வெளியில் சென்றதனாலன்றோ எனக்கு இன்று இந்த இழிநிலை? அன்பானவர்களே! நான் யார் என்பது உங்களுக்காவது தெரிகிறதா? நான் தான் குடை.

அ. யசோதா
ஆண்டு 4 "B"

---

# கிராமிய நடனங்கள்

பண்டைக் காலத்தில் மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தப் பறவைகள், மிருகங்கள் போலத் தாமும் ஒரு தாளக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதற்கேற்ப கால்களையும் கைகளையும் அசைத்து குழுக்களாகவும், தனியாகவும் நடனம் ஆடினார்கள்.

நாகரிக வளர்ச்சியின் காரணமாக கிராமங்கள் உருவாகின. ஒவ்வொரு கிராமத்திற்கும் குலதெய்வங்கள் ஏற்படுத்தப்பட்டன. தெய்வங்களை மகிழ்விப்பதற்கும், தமக்கு நன்மை வேண்டியும் நடனங்கள் ஆடினார்கள். இந்த வகையில் தோன்றியவையே கிராமிய நடனங்களாகும். இந் நடனங்கள் மக்களின் பாரம்பரிய பண்பாட்டை உணர்த்துவனவாகவும் இருந்தன. கும்மி, கரகம், காவடி, கோலாட்டம் என்பன இவ்வாறானவையே.

ஆதிகாலத்தில் கும்மி நாடோடி வகையைச் சேர்ந்த கூட்டு நடனமாக நடத்தப்பட்டது. எந்த ஒரு சுப காரியங்களிலும் கும்மிநடனம் இடம்பெறும். பதினெட்டாம் பெருக்கு என்னும் பண்டிகைக் காலத்தில் காவிரிக்கரையோரத்தில் தஞ்சைப் பெண்கள் கும்மி நடனம் செய்வர். இந்த நடனத்தில் பெண்கள் அணியாக நின்றும், மத்தியில் தீபம் ஏற்றி அதனைச் சுற்றியும் கும்மி அடிப்பர். தீபத்தைக் கடவுளாகக் கொண்டு சுப காரியங்களை நிறைவேற்றுதலின் பொருட்டுப் பிரார்த்திப்பதே இதன் நோக்கமாகும். கும்மி அடிப்பதனால் லயநிர்ணயம், தாளக்கட்டுப்பாடு, உடற் பயிற்சி என்பன ஏற்படும், கை கொட்டுதல், கால் அடித்தல் என்பன கும்மி நடனத்தில் முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றன. கும்மிக்கு இரட்டைப் படைப் பெண்கள் அவசியம் இந்துக்களின்

வைபவங்களிலும் கும்மி இடம்பெறும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

நமது நாட்டில் பிரபல்யமாக விளங்கும் மற்றொரு நடனம் கரகம் ஆகும். ஒவ்வொரு கிராமத்திலும் மிக்க பயபக்தியோடும் சிரத்தையோடும் தாய்க்கடவுளான மாரியம்மனை பஞ்சம், கொள்ளை நோய், துன்பம் போன்றவற்றிலிருந்து விடுபட கரகம் ஆடி வழிபடுவர். கரகம் என்பது குடத்தை அலங்காரம் செய்து, அதற்கேற்ப அணிமணிகளாலும், இலைகளாலும் அலங்காரம் செய்து, மேற்புறத்தில் பூவேலைப்பாடுடன் கூடிய ஒரு முடி போன்ற அமைப்பை எழுப்பி, உச்சிகளில பொம்மை, கிளி என்பவற்றைச் செருகி நடனம் ஆடுவதாகும். பொதுவாக ஆண்களே கரகம் ஆடுவர். திருகோணமலையில் இந்த நடனம் இன்றும் நிலைத்திருப்பதைக் காணலாம். விஜயதசமி நாளன்று ஒவ்வொரு அம்மன் கோயில்களிலிருந்தும் மாலை நேரத்தில் ஆண்கள் தங்களை அழகாக அலங்கரித்து, அதாவது பாவாடை, கழுத்தில் மாலை போன்ற அணிகளுடன் நாதஸ்வரம், தவில், தாளம் போன்ற இன்னிசைக் கச்சேரிகளுடன வீதி வழியாகச் சென்று இசை வேறுபாடுகளுக்கு ஏற்ப தமது உடலை அசைத்து நடனம் ஆடுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் பிரபல்யமான கிராமிய நடனம் காவடி ஆகும். ஆறுமுகப் பெருமானுக்குத் தமது காணிக்கையைச் செலுத்தச் செல்கின்ற பக்தர்களின் பழக்கத்தில் காவடி தோன்றியது. முருகனுடைய ஆறுபடை வீடுகளுக்குச் செல்லும் பக்தர்கள் காவடி நடனங்கள் செய்து வழிபட்டனர். மரத்துண்டினால் வில் போன்ற வளைவைச் செய்து இரு மருங்கும் மயில் இறகுக் கற்றைகளைச் செருகி வளைவின் முழுப்பகுதியும் பட்டினாலும், மணிகளாலும் அழகு செய்யப்பட்டிருக்கும். பாற்காவடி, பன்னீர்க்காவடி புஸ்பக்காவடி, புறாக்காவடி, கிளிக்காவடி எனப் பலவாறான காவடிகள் இன்று ஆடப்படுகின்றன. நேர்த்திக்கடன் மூலம் இறைவனுக்குத் திருவிழாக் காலங்களிலும், பண்டிகை நாள்களிலும் துலாக்காவடி, பறவைக் காவடி என எடுத்து ஆடப்படுகின்றன.

மேளம், நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகளின் தாளலயத்துக்கு ஏற்ப தோளில் காவடியுடன் கால்களையும் உடம்பையும் அசைத்து ஆடுவார்கள். கால்களிலே லய அழுத்தம் முக்கியமாக காணப்படும். காவடி ஆடுபவர்கள் விரதமிருந்து கழுத்தில் மாலை தொங்க வேட்டி அணிந்து இருப்பார்கள்.

கோலாட்டம் என்பது நாடோடி வகை கூட்டு நடனமாகும். சுப காரியங்களிலும் பஜனைகளிலும் இடம் பெறும் விளையாட்டு கேளிக்கை என்பனவாக இது இருப்பதுடன் உடற்பயிற்சியுடன் லயநிர்ணயமும் ஏற்படுத்தும் நடனமாகும். இதற்கு வயது வேறுபாடு இல்லை. சிறுவர் தொடக்கம் பெரியோர்வரை பால் வேறுபாடின்றி நடனமாடுவர். பெண்கள் ஆடுவதே கவர்ச்சிகரமானது. கால் தட்டுதலும் கோல் தட்டுவதும் ஒருமித்த செயலகளாக இருக்கும். கோலாட்டம குறிஞ்சி நிலத்தில் பிரபல்யமானது எனினும் மருதநில மக்களும் நிலாக் காலங்களில இதனை ஆடி மகிழ்வார்கள். கயிற்றுக் கோலாட்டம எனப்படும் பின்னல் கோலாட்டமும் உள்ளது. இரண்டு கைகளிலும ஒவ்வொரு கயிற்றையும் கோலையும் பிடித்து இரு படையான ஆட்கள் ஆடுவது இதுவாகும். பாடல் முடிய கையிலுள்ள கயிறும் பின்னி முடியும். இந்த நடனத்தில் தாளம் தவறாமலும ஞாபக சகதியுடன ஆடப்படுதல் அவசியமாகும். ஆடுபவர்கள் வர்ணச் சிற்றாடை அணிவார்கள். ஆண்களாயின் சர்வாணியும் தலையில பட்டியும அணிவார்கள்.

கிராமிய நடனங்கள் பல் வேறு கோணங்களில் நடைபெற்று வருவதுடன நமது பண்பாட்டு விழுமியங்களை பாதுகாககும் ஊற்றுக் கணகளாகவும் இன்று மிளிர்கின்றன.

*வீ. தனுசியா*
ஆண்டு 8 A

# இசையின் தோற்றமும், பெருமையும்

உலகம் தோன்றியதை எப்போதென வரையறை கூற முடியாமல் உள்ளது போலவே இசை தோன்றியதும் எப்போது என்று யாராலும் கூறமுடியாது. பலரும் இப்படித் தோன்றியிருக்கலாம், அப்படித் தோன்றியிருக்கலாம் என்று தத்தம்கருத்துக்களைக் கூறுகிறார்களேயன்றி திட்டவட்டமாகக் கூறமுடியாது.

ஆனால் நாம் இயற்கையைக் கருத்தில் கொண்டே இயற்கையில் உயிரினங்கள் மரஞ்செடி கொடிகள் யாவற்றையும் கொண்டு, அவற்றின் ஒலிகளைக் கொண்டு இசையை உணர்ந்து, இசையின் தோற்றத்தைக் கூறுகிறோம்.

எப்படியெனில் இயற்கையின் அசைவுகள் உயிரினங்களின் ஒலி அலைகள் மூலம் இசை தோன்றியது என்கிறோம். இசையின் தோற்றத்தில் ஏழு ஸ்வரங்களை அவற்றின் கூடிச்செல்லும் ஒலி அமைப்பைக் கொண்டு கண்டு பிடித்து அவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டே மிகுதி இசை வடிவங்களை நோக்குகின்றோம்.

ஏழுஸ்வரங்களான ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் பெயர்களைக் கொண்டு அவற்றின் ஏற்ற இறக்கம், சுருதி எல்லைகள் போன்றவற்றைக் கொண்டு நல்ல நாதத்தோடு இசையைக் கண்டு பிடித்தனர், ஏழு ஸ்வரங்களுக்கும் தமிழிசையில் குரல், துத்தம், கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் என்று கூறுகின்றனர். இவற்றின் தோற்றத்தைச் சில ஜீவராசிகளின் இயற்கை நிலையில் முழங்கும் சத்தத்தை அடிப்படையாகக் கொண்டு கண்டுபிடித்தனர். அவை ஸட்ஜம்—மயில், ரிஷபம் — இடபம், காந்தாரம்—ஆடு, மத்திமம் - க்ரௌஞ்சம், பஞ்சமம்-குயில், தைவதம் - குதிரை, நிஷாதம் - யானை என்பனவாகும்.

இதோடு இசைக் கருவிகளையும், கண்டு பிடிக்கச் சில இயற்கைப் பொருள்கள், உயிரினங்கள், மரஞ்செடிகள் தான் காரணம், அதாவது இயற்கையில் மூங்கில்களில் வண்டுகள் துவாரங்களை ஏற்படுத்த அதில் காற்றின் உந்துதலால் எழுந்த ஓசையும் இயற்கை மண், கல்லு, மரம் சங்குகள், உலோகங்கள், மிருகங்களின் தோல்கள் போன்றவற்றைக் கொண்டு இசையை உணர்ந்தவன் சில இசைக் கருவிகளையும் கண்டு பிடித்தான். இப்படியாக மனிதனின் மூளை வளம் பெற்றுக்கொண்டு செல்லச் செல்லப் புதிய புதிய இசைக் கருவிகளும் தோற்றம் பெறுகின்றதும் அழிவடைகின்றதுமாக இருந்து வருகின்றது.

இது இவ்விதம் இருக்க நாம் எமது இசையின் பெருமை பற்றியும் கூற வேண்டும். இறைவன் என்று நாம் எமக்கு அப்பால் பட்ட ஒரு சக்தி உள்ளதைக் கூறி வருகின்றோம். இந்த வகையில் அந்த இறைவனை அடைவதற்குச் சிறந்த முதன்மை ஊடகமாக மனிதன் பக்தியோடு வெளிப்படுத்துவதும், ஆனந்தம் அடைவதும் இசைஇன்பத்தில் தான் தங்கியுள்ளது. இதற்குப் புராதன காலந்தொட்டு சமய வழிபாடுகளும், சிந்தனைகளும் சான்று பகர்வதை பழம் பெரும் நூல்கள் வாயிலாக நாம் அறிகின்றோம்

இசை கேட்டு உருகாத உள்ளமும் இல்லை, உணராத உயிரினங்களும் இல்லை. என்றே சொல்ல முடிகிறது. ஏன் தாவரங்கள் கூட இசையை உணர்வதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

கல்லையும் இசைய வைக்கும் இயல்பு இசைக்கு உண்டு என்பதைத் தமிழர் சிற்பக்கலை மூலம் தமிழ் நாட்டில் சில ஆலயங்களில் நிறுவியுள்ளனர்.

இன்று எந்தமொழி பேசுபவனாக இருந்தாலும் அவன் இசையை ரசிக்கும்

ஆற்றல் உள்ளவனாவான். இசையை ரசிக்க முடியாத ஒருவன் உலகில் இருந்தால் அவன் வெறும் சடமாக அதாவது உயிரற்ற ஒருவனாகத்தான் கருத முடியும்.

இசையின் பெருமையை இன்னும் ஒரு வகையில் கூறின் ஒருவனுக்கு கண் மிகவும் அவசியமானது. எந்தக் கலையையும் கண்களால் கண்டு ரசிப்பதுதான் இயல்பு. ஆனால் இசைக்கலைக்கு கண்கள் தேவையில்லை. காது ஒழுங்காக இருந்து விட்டால் தூரத்தே இருந்து கொண்டே இசையை ரசிக்க முடியும். இந்தப் பெருமை இசைக்கலைக்கு மட்டுமே உண்டு. மனித மனங்களில் மாசு நீக்கும் குளிர்ந்த நீர் அருவி போன்றது இசையாகும்.

''இசை கேட்டால் புவி அசைந்தாடும்''
'' இசையால் வசமாகா இதயமேது? ''

த. மாலதி
ஆண்டு 9 'A'

---

# இலங்கையின் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி

புராதன காலங்களில் மக்களின் விவசாயத் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு குளங்களைக் கட்ட வேண்டிய கடமை அரசனிடம் இருந்தது. விஜயனின் அமைச்சர்களுள் ஒருவனான அனுராத என்பவனாலேயே முதன் முதல் குளம் கட்டப் பட்டதாக அறிகிறோம்.

பண்டுகாபயனால் அபயவாவி, காமினிவாவி, ஜெயவாவி ஆகிய குளங்கள் கட்டப்பட்டதாக அறிய முடிகிறது. அவற்றுள் அபயவாவி மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தற்போது அபயவாவி பசவக்குளம் என அழைக்கப்படுகிறது.

நீர்ப்பாசன வரலாற்றிலே தேவநம்பிய திஸ்ஸ (கி.மு. 247 — 207) மன்னனின் காலம் பொற்காலமாகும். இவனால் திஸாவாவி அமைக்கப்பட்டது.

சத்தாதிஸ்ஸ மன்னனால் 18 குளங்கள் கட்டப்பட்டதாக வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன. கிறிஸ்து காலத்தின் ஆரம்பம் வரை கட்டப்பட்ட குளங்களை நோக்கும் போது, அவை மல்வத்து ஓயா, கலா ஓயா. தெதுறு ஓயா, கிருந்தி ஓயா, மாணிக்க கங்கை, கும்புக்கன் ஓயா, வளவை கங்கை, கல் ஓயா ஆகிய பகுதிகளை அண்டியே அமைக்கப்பட்டுள்ளமை தெளிவாகும்.

பெருங்குளங்களைக் கட்டுவதில் வசபன் (கி. பி. 66 — 111) முன்னோடியாகத் திகழ்ந்தான். இவனால் 11 குளங்களும், 12 கால்வாய்களும் கட்டப்பட்டன. மகாவிலாச்சிக் குளம், நொச்சிப்பொத்தன குளம், கிரிவடுன்ன குளம் என்பன இவன் கட்டுவித்ததாக அறியப்பட்டுள்ளது. அலகரகால்வாயும் இவனாலேயே அமைக்கப்பட்டது.

மகாசேன மன்னனால் (கி.பி 274 —304) 16 குளங்களும், 1 கால்வாயும் கட்டப்பட்டது. இவற்றுள் மின்னேரியாக் குளம், குருளுவாவி, மகாகணதரவாவி, மாமினியவாவி, கவுடுலுவாவி போன்றன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவன் பப்பதந்த கால்வாயையும் அமைத்தான். மின்னேரிய குளத்தைக் கட்டியமையால் இவன் 'மின்னேரியாத் தெய்வம்' என அழைக்கப்பட்டான்.

தாதுசேன மன்னன் (கி. பி. 455 — 473) 18 குளங்களையும் கால்வாய்களையும், அமைத்தான். கலாவாவி, மாத்துகமவாவி, பானகம்வாவி, மாணாமதவ வாவி, மெத்த குட்டிய வாவி, மாவெலிய வாவி, போன்றன அமைக்கப்பட்டன. ஜோதகால்வாய், அல்லது ஜெயகங்கையும் இவனாலேயே அமைக்கப்பட்டது.

இரண்டாம் முகலன் (கி.பி. 531 — 551) மன்னன் இலங்கையில் குறிப்பாக மூன்று குளங்கள் கட்டுவித்தான். இவற்றுள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பதவியாக்குளமும், பதபகன் குளம் (நாச்சதுவ வாவி) ஆகியவையே அவையாகும்.

முதலாம் அக்போ (கி.பி. 571 — 601) மன்னன் சிறிவட்டமானகவாவி, குருந்து வாவி, அல்லது, தண்ணி முறிப்புக் குளம் மாமடுவக் குளம் ஆகியவற்றை அமைத்தான். மினிப்பே அல்லது மணிமேகலை எனும் அணைக்கட்டையும் இம்மன்னனே அமைத்தான்.

இரண்டாம் அக்போ(கி.பி. 604 — 641) மன்னனுடைய காலத்தில் கந்தளாய்க்குளம், கிரிந்தலைக்குளம், என்பன அமைக்கப்பட்டன. இம்மன்னனின் ஆட்சியில் நீர்ப்பாசனம் உச்சநிலையில் இருந்ததாக அறிகின்றோம். ஆற்றுநீரைத் திசைதிருப்பி நீரைச் சேகரித்தல், நீரைப் பேணல் ஆகியன சம்பந்தமான பல நடவடிக்கைகள் ஒன்று சேர்க்கப்பட்டு நீர்ப்பாசன வேலைகள் பூரண நிலையை அடைந்திருந்தன. இவனுக்குப் பின் ஏறக்குறைய 60 ஆண்டுகளாக நாட்டின் அரசியல் நிலை குழப்பகரமாக இருந்தது. மானவர்மன் (கி.பி. 684 — 708) மன்னன் ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் நாட்டில் அமைதி நிலவியது. கி. பி, 1017ல் சோழர் அநுராதபுரத்தைக் கைப்பற்றினர். அதன் பின் தலைநகரமும் பொலநறுவைக்கு இடம் மாற்றப்பட்டது.

முதலாம் விஜயபாகு (கி. பி. 1070-1110) மன்னன் காலத்தில் புனரமைப்பு நடவடிக்கையிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. சோழர் ஆட்சியில் சிதைவுற்றிருந்த (1017-1070) நீர்ப்பாசன முறையினை புனரமைத்தான். இவன் அலகரக்கால்வாயைத் திருத்தி அதனுடன் இணைந்த மின்னேரியா, கவுடுலு, கந்தளாய் நீாப்பாசன முறையை உயர்நிலைக்கு கொண்டுவந்தான். இவனால் மாகல் கடவள, மகாகணதறாவ, பத்பகன்வாவி போன்ற குளங்கள் திருத்தி அமைக்கப்பட்டன.

இலங்கையின் நீர்ப்பாசன வரலாற்றில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலம் (கி. பி. 1153-1186) ஒரு பொற்காலம் எனக் கருதப்படுகிறது. கி. பி. 1153இல் பொலநறுவை அரசன் ஆவதற்கு முன்னர் கலாஓயாவுக்கும், களுகங்கைக்கும் இடைப்பட்ட தென் பிரதேசத்து ஆதிப்பாதன் என்ற பதவியை வகித்துக் கொண்டு, பராக்கிரமபுரம் (பண்டுவஸ்நுவர) என்ற பெயரிலே ஒரு நகரை அமைத்து, அங்கே வசித்து வந்தான். அப்போது இவன் தெதுருஓயாவிற்கு குறுக்கே மூன்று இடங்களில் அரண்கள் கட்டுவித்து கால்வாயின் வழியே தாழ்ந்த பிரதேசங்கட்கு நீர் வழங்கினான். இவற்றுக்கு அண்மையிலுள்ள பண்டாரவாவியைப் பெரிதாக்கினான். களுத்துறை மாவட்டத்தில் அமைந்த சதுப்பு நிலத்தைப் பயிர் செய் நிலமாக மாற்றினான்

இவன் அரசனான பின்னர் தோபவாவியையும், தும்புலுவாவியையும் இணைத்து பராக்கிரமசமுத்திரத்தை அமைத்தான். ''வானிலிருந்து விழும் ஒருதுளி நீரேனும் கடலில் கலக்கக்கூடாது'' என இவன் கூறினான்.

நிஸஸங்கமல்ல மன்னனால் நிஸ்ஸங்க சமுத்திரம் என்ற குளம் அமைக்கப்பட்டது. கி. பி. 1215 ல் இடம் பெற்ற மாகனின் படையெடுப்பினைத் தொடர்ந்து இலங்கையின் நீர்ப்பாசனம் வீழ்ச்சி அடைந்தது. மக்கள் றுகுணரட்டை நோக்கியும், தென்மேற்கு நோக்கியும் இடம் பெயர்ந்தனர். எனவே தொழிலாளர் வசதி குறைந்ததுடன். உறுதியான் ஆட்சியும் காணப்படவில்லை.

சோதிலிங்கம் கோகிலன்
ஆண்டு 9 'A'

# இன்டர்நெட்

இன்டர் நெஷனல் நெட் வேர்க் என்பதன் சுருக்கமே இன்டர்நெட் ஆகும். தொழில் நுட்பம் காரணமாகப் பரந்து விரிந்த உலகம் மிகச் சுருங்கிவிட்டது. அமெரிக்காவில் இருக்கும் ஓர் அறிவியல் நூலகத்தின் புத்தக அடுக்குகளைக் கொழும்பில் ஒரு மாணவனின் படிக்கும் அறைக்குள்ளேயே காணமுடியும்.

உலகம் முழுவதிலும் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ள கம்யூட்டர் அமைப்புக்களுக்கு இடையே தகவல் தொடர்பைச் சாத்தியம் ஆக்கியுள்ளது. இன்டர்நெட் உலகின் பல்வேறு இடங்களில் பெரிய பெரிய கம்யூட்டர் நிறுவனங்களில் மிகச் சக்திவாய்ந்த கம்யூட்டர்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் வணிகம், மருத்துவம், அறிவியல், விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற பல்வேறு துறைகள் தொடர்பான ஏராளமான தகவல்களைப் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அத்தகைய தகவல் களஞ்சியங்களில் இருந்து அரிய தகவல்களை நமது கம்யூட்டர் திரையில் படித்தறிய முடியும். தேவையெனின், அவற்றை நகல் எடுத்துக் கொள்ளவும் முடியும்.

தொலைபேசி மூலம் உள்ளூரில் உள்ள ஹோஸ்ட் கம்யூட்டருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். உலகின் எங்கோ ஒரு மூலையிலுள்ள தகவல்தளக் கம்யூட்டரின் முகவரியைச் சரியாகத் தெரிவிக்கவும் வேண்டும். ஹோஸ்ட் கம்யூட்டர் அந்தக் கம்யூட்டருடன் எமக்குத் தொடர்பை ஏற்படுத்தித் தரும்.

ஹோஸ்ட் கம்யூட்டரில் நுழைவதற்கு முன், பெயர், சங்கேதக்குறியீடு எண் என்பவற்றைச் சரியாகத் தரின், விரும்பிய தகவல்தளத்தில் இணைப்பு ஏற்படுத்திக் கொண்டு வேண்டிய தகவல்களைத் தேடிப் பெறமுடியும். தேவைப்படும் தகவல் எந்தக் கம்யூட்டரில் இருக்கிறது என்பதைத் தேடிக் கண்டு பிடித்துத் தருவதற்கு பிரவுஸர் என்னும் சொப்ட் வெயர் தொகுப்புகள் இருக்கின்றன. இன்டர்நெட்டில் விளம்பரம் செய்யவும் வசதி உண்டு. அதற்குரிய விளம்பரப் பக்கங்களைத் தயார் செய்வதற்கென்றே சொப்ட்வெயர் தொகுப்புகள் உள்ளன.

*மகாலிங்கசிவம் குறிஞ்சில்குமரன்*
ஆண்டு 10 "A"

# மனை அலங்காரம்

மனையை அலங்கரித்தல் மனையாளின் முக்கிய கடமையாகும். மனையை அலங்கரித்தால் அம்மனையில் வாழும் உறுப்பினருக்கும் மற்றும் அம்மனைக்கு வரும் விருந்தினருக்கும் மனதில் இனம் புரியாதவொரு புத்துணர்ச்சி ஏற்படும். மனையை அலங்கரிக்கும் மனையாளுக்கு பாராட்டும் மற்றும் வேறு புது ஒழுங்கு முறையும் மனதில் ஏற்படும்.

மனையை அலங்கரிக்கும் போது மனதில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் நிறமாகும். நிறத்தினை நாம் தெரிவு செய்யும் போது கண்ணுக்கு குளிர்மையாகவும், கவர்ச்சியாகவும் இருக்கக் கூடிய நிறத்தினைத் தெரிவு செய்ய வேண்டும். உதாரணமாக மென்பச்சை மென்நீலம் போன்றவை குளிர்மையான தன்மையைக்கொடுக்கும். மென்நிறங்கள் அறையின் அளவை பெரிதாக அமைக்கும். கடும் நிறங்கள் அறையைச் சிறிதாகக் காட்டும். இந் நிறங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் வரவேற்பறை படுக்கையறை, சமயலறை போன்ற அறைகளுக்கு நிறம் தீட்டலாம். மனையின் முக்கியமான பெரும் பகுதியாகப் பார்ப்போருக்கு உடன் தெரியும் இடம் தளம். இத்தளம் மனைக்கு சிறந்த அழகைக்கொடுக்கும்.

உதாரணமாக வரவேற்பறைத் தளத்திற்கு 'காப்பெற்' விரிக்கலாம். இத் தளமூடி மனையின் நிறத்திற்கு ஏற்ப தெரிவு செய்தல் நன்று. அறையின் தன்மையை எடுத்துக்காட்ட உதவுவது தளமாகும். தளத்திற்கு பயன்படுத்தப்படும் மென்மையான நிறங்கள் மனையின் அலங்கரிப்புக்கு மிகவும் சிறந்ததாகும்.

மனையினை அலங்கரிக்கும் போது திரைச்சீலைகள், தளபாட உறைகள் இவற்றின் நிறம், தன்மை, வடிவம் போன்ற அம்சங்கள் ஓர் அறைக்கு தனித்துவத்தை, அறைக்கு ஏற்ற இயல்பை வெளிக்காட்டுவனவாகும். திரைச்சீலைக்கு தெரிவு செய்யப்படும். துணி கதவு, யன்னல் அமைப்பிற்கு பொருத்தமானதாக இருத்தல் அவசியம். உராய்வு அற்றதாகவும் அழகானதாகவும், சூரிய ஒளியால் பாதிப்பு ஏற்படாது கண்ணாடி நாரினால் ஆன துணிகள் உதாரணமாக இரயோன், நைலோன் துணிகள் பொருத்தமானவையாகும்.

ஓர் மனைக்கு அழகைக் கொடுப்பது பூ அலங்காரமாகும். வடிவம், தன்மை, நிறம் என்பவற்றில் மாற்றம் ஏற்படுத்தக் கூடியதாக பூக்கள் மற்றும் தாவரப்பகுதிகள் இன்னும் சில துணைப் பொருள்களை சேர்த்து ஒழுங்குபடுத்தும் கலை பூ அலங்காரமாகும். ஓர் அறைக்கு உயிரூட்டவும் அல்லது மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்தவும் அத்துடன் அழகை ஏற்படுத்துவதே பூ ஒழுங்காகும். பூ ஒழுங்கு செய்யும் போது இயற்கை மலர் ஒழுங்கு, செயற்கை மலர் ஒழுங்கு, காய்ந்த மலர் ஒழுங்கு என வேறு பிரித்து அலங்காரம் செய்யலாம். சாப்பாட்டு மேசை, படுக்கையறை என்பவற்றிற்கு வாசமற்ற மலர்களை ஒழுங்கு செய்யலாம். வரவேற்பறையின் யன்னல் ஓரமாக உயரமாக மலர் ஒழுங்கு செய்யலாம். மற்றும் சுவர் அலங்காரத்திற்கு பூங்கொத்துக்கள், படவகைகள், சுவர்மாட்டிகள் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறாக மனையின் எல்லாப் பகுதிகளையும் அவற்றின் தன்மைக்கேற்ப அலங்காரம் செய்யலாம். எனவே மனையை அலங்காரம் செய்வதால் மனதில் ஒரு புத்துணர்ச்சியும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

ந. கோகிலவதனி
ஆண்டு 10 'A'

# அற்புதமான அஜந்தா ஓவியங்கள்

இந்தியாவின் உயர்தரமான கலைப் படைப்புக்களில் ஒன்றாகக் கருதப்படும அஜந்தா ஓவியங்கள் பௌத்த சமயத்தில் கற்பிக்கப்படும் தானம், தருமம், உபதேசம் போன்ற நற்பண்புகளைச் சித்திரம் மூலம் வெளிப்படுத்துவதில் முக்கிய இடம் பெற்றுள்ளன. இயற்கை அழகு, வரலாற்று நிகழ்ச்சிகள், வாழ்வியல் என்பவற்றினூடாக ஓவியன் தனது உயரிய நோக்கை நிறைவு செய்துள்ளான்.

அஜந்தாவிலுள்ள ஓவியங்களின் விசேட பண்புகளாக உருவ அழகு சிறப்பித்துக் காட்டப்படுவதுடன், உயிரோட்டமான தன்மையையும் காணமுடிகின்றது. விலங்கு, தாவரம், கனிப்பொருள்கள் என்பவற்றில் இருந்து தயாரிக்கப்பட்ட இயற்கை வர்ணப் பயன்பாட்டையும், தள அமைப்பின் விசேட நுட்பங்களையும் காணமுடிகின்றது.

சில சந்தர்ப்பங்களில் சித்திரக் கருவின் பிரதான உரு பெரிதாக வரையப்பட்டுள்ளது. பத்மபாணி போதிசத்துவர் உருவம் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இது 1ம் குகையில் உள்ளது. இந்த ஓவியம் அஜந்தா ஓவியங்களில் ஓர் உயர் தரமான இடத்தைக் கொண்டுள்ளது. மதச்சார்புடைய ஓவியங்களாக இருப்பினும் பொழுதுபோக்குத் தன்மைகள் கருத்தைப் பாதிக்காத முறையில் காட்டப்பட்ட விதம் சிறப்பாகவுள்ளது. சில சித்திரங்கள் நகைச்சுவைத் தன்மை கொண்டுள்ளன. 17வது குகையின் இடப்பக்கச்

சுவரில் தீட்டப்பட்ட மதகுருவின் விகாரமான உடலமைப்புக்களுள் ஆட்டின் மீசையும், உடைந்த பற்றுண்டுகளும் இங்கு குறிப்பிடத்தக்கன.

இரண்டாம் இலக்க குகை ஓவியங்களில் கோடுகள் மூலம் ஆழம் காட்டப்பட்டுள்ளது. இதற்காக கோடுகளுக்கு இருள் நிறங்களைப் பயன்படுத்தல், துளி முறை மூலம் வர்ணமூட்டல் என்பன விசேட பண்புகளாகக் காணப்படுகின்றன.

அரசனின் காலடியில் வீழ்ந்து வணங்கும் பெண்ணையும், அரசன் கையில் வாளுடனும் ஓவியம் வரையப் பட்டிருக்கிறது. இக் காட்சியை மேலும் வலுவூட்டும் வகையில் ஒரு பெண் பயந்து ஓடுவது போலவும், இன்னொரு பெண் இக்கொடிய தண்டனையைப் பார்க்க முடியாது கைகளால் முகத்தைப் பொத்துவது போலவும், மூன்றாம் பெண் தயக்கத்துடன் அரசனை உற்றுநோக்குவது போலவும், நான்காம் பெண் தூணில் சாய்ந்து தன் வலக்கையை மடித்துக் கன்னத்தில் வைத்துத் துயரத்தின் எல்லையைக் காட்டுவது போலவும் ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன.

வரலாற்று நிகழ்ச்சிகளைக் காட்டும் ஓவியங்களுள் சிங்களவதானம் ஒரு முக்கிய சித்திரமாகும். நடுக்கடலில் கப்பல் உடைந்ததனால் சிங்களத்தீவுக்கு வருதல் இராட்சதயுத்தம் காட்டப்பட்டு முடிவு பெறும் அக்கால யுத்தம், ஆயுதங்கள் என்பன நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் பயங்கரம் உயிரோட்டமாகக் காட்டப்பட்டுள்ளது.

புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காட்டும் சித்திரங்களுள் புத்தர்பெருமான் கபில வஸ்துவிற்கு வருகை தந்து வீடு வீடாகத் தானம் கேட்டுச் செல்லும் விதத்தைக் காட்டும் சித்திரம் சிறப்பானது; இங்கு புத்தர் பெருமான் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளார். அவரின் மேன்மையைக் குறிப்பதாக இது அமைந்துள்ளது.

அஜந்தாவின் கலைஞன் இயற்கை அழகைச் சிறப்பாகச் சித்திரமாக்கியுள்ளான். காட்டுப் பறவைகள். விலங்குகளும்-பறவைகளுள் வாத்துக்கள், மயில்கள், கிளிகள் என்பன அச்சத்துடன் பார்க்கும் விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. வேகமாகச் செல்லும் மான்கள், கபடத்தன்மையுடன் எதேச்சையாகத் திரியும் குரங்குகள், கம்பீரமாகப் பயணம் செய்யும் யானைகள். பெருமையுடன் காணப்படும் குதிரைகள், சண்டையிடும் எருதுகள் என்பன அவற்றின் நிலைகளைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. பூக்கள், காய்களுடன் நிறைந்த பல்வேறு மரம் கொடிகள், சிறந்த பூக்கள், இந்தியப் பிரதேசங்களுக்குரிய இயற்கை அழகை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

19 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய ஓவியங்களுக்கெல்லாம் மையமாக இருந்து வந்த ராஜபுத்தான சிறு சித்திரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவனவாக இரண்டு காதலர்களின் சித்திரங்கள் அஜந்தாவின் பல இடங்களில் தீட்டப்பட்டுள்ளன. எனவே, ஆராய்தல், நுணுக்கமாக அவதானித்துக் கண்டறிதல், கற்றல், களிப்பெய்தல் எனப் பல கோணங்களில் பல நாட்களை அஜந்தாகுகை ஓவியங்களில் செலவிடலாம்,

கா. ரமேஷ்
ஆண்டு 11 'A'

போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுபவர்
தூற்றட்டும் ஏற்றதொரு கருத்தை எனதுள்ளமென்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்

— கண்ணதாசன்

# எயிட்ஸ்

எயிட்ஸ் நோயைப் பரப்புவது எச்.ஐ.வி வைரசுகளாகும். இந்நோய் சிசுக்களையும், முதியவர்களையும், ஏழைகளையும், பணக்காரர்களையும் தாக்கும். பெரும்பாலும் தவறான பாலியல் நடத்தையில் ஈடுபடுபவர்களையே இந்த வைரசுகள் பலியெடுக்கின்றன. மனிதரின் இரத்தமே இந்த வைரசுகளின் பிரதான இருப்பிடமாகும்.

உலகம் முழுவதும் 26 லட்சம் சிறார்கள் 1996 வரையும் எயிட்ஸ் வைரசின் தொற்றுதலுக்கு உட்பட்டுள்ளனர். இன்று இன்னும் அதிகமானோர் இந்த வைரசின் தொற்றுதலுக்கு உட்பட்டுள்ளனர். தினமும் 8 500 சிறுவர்கள் புதிதாக எயிட்ஸ் வைரசுக்கு ஆளாகி விடுகிறார்கள். இவர்கள் தாய்மாரின் மூலமே இந்நோயின் தொற்றுதலுக்கு உட்பட்டுள்ளனர் எனலாம்.

எயிட்ஸ் வைரசுகளைக் கொண்டுள்ள தாய் ஒருத்தி கருத்தரித்தால், அவரது குழந்தைக்கும் எயிட்ஸ் வைரசுகள் தொற்றிக் கொள்ளும், குழந்தைகளுக்குப் பாலூட்டும் பொழுதும், தாய்க்கு இந்த வைரசுகள் இருப்பின் குழந்தைக்கும் தொற்றுவதற்கு இடமுண்டு.

எயிட்ஸ் வைரசுகளைக் கொண்ட தாய், கருத் தரித்துப் பிள்ளை பிறந்தால், தாய் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இறந்து விடுவாள். பிள்ளையும் நான்கு வருடங்களுக்குள் இறந்து விடும். எனவே, எயிட்ஸ் வைரசுகள் உள்ள தாய்மார் கருத்தரிக்கவோ, பாலூட்டவோ கூடாது.

பதினெட்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர்களில் தவறான முறையில் தன்னினச் சேர்க்கைகளிலும், ஆண் - பெண் பாலுறவுகளிலும் ஈடுபடுபவர்களுக்கு இந்த வைரசுகள் தாக்கத்தை ஏற்படுத்தும். பாலியல் துஷ்பிரயோகங்களிற்கு உட்படும் சிறுவர்களுக்கும் இந்த வைரசுகளின் தொற்று ஏற்படும்.

எனவே, இன்றைய காலகட்டத்தில் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது அவசரத் தேவையாகும். சிறுவர்கள் ஒரு புறம் பெற்றோரின் பாலியல் நடவடிக்கையாலும், மறுபுறம் பாலியல் துஷ்பிரயோகக்காரராலும் தண்டிக்கப்படுகின்றனர். எதுவுமேயறியாத இந்த அப்பாவிச் சிறுவர்களை இத்தகைய கொடூர நோய்க் கிருமிகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். சிறுவர்களின் நலன் கருதிப் பெற்றோர் தவறான பாலியல் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிவிடுதல் சிறந்தது.

தவறான பாலியல் நடத்தைகளால் ஒருவருக்கு எச்.ஐ.வி வைரசுகள் தொற்றியதும், எயிட்ஸ் நோயாக மாறிவிடுவதில்லை. குறைந்தது பத்து வருடங்களாவது கழிந்த பின்னர்தான் எயிட்ஸிற்குரிய அறிகுறிகள் தென்படும். ஆனால், சிறுவர்களுக்கு எயிட்ஸ் வைரசுகள் தொற்றினால் அது உடனேயே எயிட்ஸாக மாறிவிடும். இவர்கள் குறைந்தது நான்கு வருடங்களுக்குள் மரணிப்பார்கள்.

உலகில் ஏற்கனவே இரண்டு கோடி முப்பது இலட்சம் மக்கள் எச்.ஐ.வி வைரசுகளுடன் வாழ்கின்றனர் என அறிகிறோம். இவர்களில் 40% பெண்கள் இருபத்தியாறு லட்சம் சிறுவர்கள் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர்.

எச்.ஐ.வி. வைரசுகளினின்றும் பாதுகாப்புப் பெற சர்வதேச அமைப்புக்கள் சில திட்டங்களை முன்வைத்துள்ளன. 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்கும் எயிட்ஸ் வைரசுகளின் தோற்றம், தாக்கம், விளைவுகள், தவிர்த்துக் கொள்ளும் முறைகள் பற்றிய பூரண அறிவூட்டல் அவசியமாகும்.

இதனைக் கல்வியாகவும், ஆலோசனைகளாகவும், கண்காட்சிகள் மூலமும் மேற்கொள்ளலாம். சிறுவர்களிடையே பாலியல் துஷ்பிரயோகம் பற்றியும் பூரண விளக்கம் கொடுத்தல் வேண்டும்.

*சோமசுந்தரர். கிருஷ்ணவேதா*
ஆண்டு 11 'A'

# நூலகம்

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரண மனிதன் ஆக்குகின்றது. கற்றவர்கள் வாசிக்காமல் விடும்பொழுது ஒரு சமூகமே தலைகுனிய நேரிடுகிறது. கல்வி வாழ் நாள் முழுவதும் தொடர்ந்து செல்லும் செயன்முறையாக அமைகின்றது. அவ்வாறே வாசிப்பும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செல்லும் செயன்முறையாக அமைகின்றது. வாசிப்பை வளம்படுத்தும் நிலையமாக அமைவதுதான் நூலகம் ஆகும்.

கல்வி வளர்ச்சியோடு நூலகங்களின் வளர்ச்சியும் சமாந்தரமாக இடம்பெற்று வந்துள்ளது. புராதன பல்கலைக் கழகங்கள் ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகளைக் கொண்ட பல்கலைக் கழகங்களாக அமைந்துள்ளன. அச்சுக்கலையின் வளர்ச்சியோடு நூலாக்கத் துறையிலும் வளர்ச்சிகள் ஏற்படத் தொடங்கின. நூல்வெளியீட்டின் வளர்ச்சி நூலகங்களின் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டபோது உரோமர்கள் நூல்களையும், ஆவணங்களையும், ஏடுகளையும் தலைகளில் சுமந்து ஓடினார்கள். ஐரோப்பாவுக்கு அவற்றைக் கொண்டு சென்று ஆராய்ந்தபோது, பூமி உருண்டையானது என்ற புதிய விடயமும் கண்டு பிடிக்கப்பட்டு ஐரோப்பியரும் விழிப் புணர்வு பெற்றனர். நாடுகாண் பயணங்களையும் ஆரம்பித்தனர். இந்த மறுமலர்ச்சி புதிய கண்டுபிடிப்புகளைத் தோற்றுவித்தது. இவ்வாறாக 13ம், 14ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா அனைத்துத் துறைகளிலும் பிரகாசிக்கக் காரணம் நூல்களேயாகும்.

நூல்கள், ஏடுகள், ஆவணங்கள் என்பன மரபுரீதியாக நூலகங்களிலேயே சேகரிக்கப்பட்டு வருகின்றன. இன்றுபல வகையான நூலகங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. அவையாவன, பொதுநூலகம்,சிறப்பு நூலகம், சிறுவர் நூலகம், வாண்மையினர்க்குரிய நூலகம், பாடசாலை நூலகம், பல்கலைக்கழக நூலகம் என்பனவாம்.

ஒரு நூலகம் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டு இயங்கும். அதாவது, வாசிப்புப் பகுதி, நூல்வழங்கும் பகுதி, உசாத் துணைப் பகுதி, சுவடிக்கூடப் பகுதி, சஞ்சிகைப் பகுதி, ஒலி ஒளி களஞ்சியப் பகுதி என்பனவாம்.

நூலகம் சிறந்த முறையில் இயங்குவதற்கு பல்வேறு நிர்வாக அலகுகளைக் கொண்டிருக்கும். நூல் வாங்கும் பகுதி, நூல் தரம் பிரிக்கும் பகுதி, வாசகர் சேவைப்பகுதி, ஆவணப் பாதுகாப்புப் பகுதி என்றவாறு செயற்படும்.

ஒரு பிரதம நூலகரின் கீழ் உதவி நூலகர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாக நியமிக்கப்படுவார்கள். நூல்களை வரன்முறையாக அடுக்கி வைப்பதற்கும், எடுப்பதற்கும், மீள அடுக்கி வைப்பதற்கும் வசதியாக டூயியினுடைய தசம அளவீட்டு முறைமை பயன்படுத்தப் படுகிறது. உலகம் முழுவதற்கும் பொதுவான தசம அளவீட்டு முறைகள் இன்று கையாளப்படுகின்றன. ஒவ்வோர் அறிவுத் துறைக்குமுரிய நூல்கள் அவற்றிற்குரிய தசம அளவீடுகளில் பதிவு செய்து வைக்கப்படும். தற்காலத்தில் நூலக செயற்பாடுகள் மேலும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

கணனிகளின் துணையுடன் நூல்கள் பட்டியல் இடும் முறைமை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. குறிப்பிட்ட துறையில் என்னென்ன நூல்கள் இருக்கின்றன என்பதைக் கணனிகள் மூலமாக உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம். மேலும், 'இன்ரநெற்' நவீன நூலக வளர்ச்சிக்கு உதவிசெய்து வருகிறது. உலகிலுள்ள எந்த நூலையோ, எந்த நூலினது பக்கங்களையோ இந்த இணையத்தின் வாயிலாகப்பெறலாம்.

உலகம் முழுவதும் வெளிவரும் நூல் களை இனங்காண இன்று ISBN முறை கையாளப்படுகின்றது. அதாவது INTER NATIONAL STANDARD BOOK NUMBER என்பதாகும். இதன்மூலம் ஒரு நூல் எந்த நாட்டில் வெளிவருகிறது, எந்தவகையைச் சேர்ந்தது எத்தனையாவது பதிப்பு என்ற வோறான தகவல்களை அறிய முடியும்.

இன்று 'டிஸ்க், டிஸ்க்கட், மைக் ரோசிப்ஸ் என்பவைகளாலும் பல ஆவணங் கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

ஆசியாவில் சிறந்த நூலகமாகவும், அரிய பழைய நூல்களைக் கொண்டிருந்தது மான யாழ்ப்பாண நூலகம் எரிந்து, அழிக்கப்பட்டு விட்டமை வேதனைக்குரிய தாகும். உலகில் பெரிய நூலகம் வாஷிங் டனில் இருக்கும் லெனின் நூலகமாகும். இரண்டாவது இடத்தை யாழ்ப்பாண நூல கம் வகித்தது. யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் கலை, கல்வி கலாசார பொக்கிசம் திட்டமிட்டு எரிந்து சாம்பரானது. நூலகங்களின் அறிவு எம் போன்ற மாணவர்களுக்கும், பொதுமக் ளுக்கும் இன்றியமையாதது. எனவே, யாழ். பொது நூலகத்தின் புனரமைப்பு நடவடிக் கைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட வேண்டியதும் அவசியமே.

*சுப்பிரமணியம் முகுந்தன்*
ஆண்டு 11 'B'

---

# தலவரலாறு: திருக்கேதீச்சரம்

ஈழத்தின் புராதன சிவத்தலங்களுள் திருக்கேதீச்சர ஆலயமும் ஒன்றாகும். இது வடபெரு நிலப்பரப்பின் மேற்குத் திசையில், மாதோட்டத்தில் உள்ள பாலா விக்கருகில் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தை கேது பகவான் வழி பாடு செய்து இட்ட சித்திகளைப்பெற்றார். தேவலோக தெய்வச் சிற்பியான மாது வட்டா வழிபாடு செய்து சிவனின் அரு ளைப் பெற்றான். இது போன்று இரா மர், இராவணன், அகத்தியர் போன் றோரும் வழிபாடு செய்து அருள்பெற்ற புண்ணிய தலமாகவும் இது விளங்குகின் றது.

கி.மு. 6ம் நூற்றாண்டில் கலிங்க நாட்டு அரசகுமாரனாகிய விஜயன் தன் தோழர்களுடன் மாதோட்டத்துறைமுகத் தில் வந்திறங்கி, இலங்கையை அடைந் தான் என்றும், அப்போது இத்துறை முகம் "மகாதித்தா" என்னும் பெயரால் அழைக்கப்பட்டது என்றும் மகாவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. பௌத்த இலக்கியங்களில் கி. மு. 3ம் நூற்றாண் டில் இருந்தே மாதோட்டம் 'மகாதீர்த் தம்' என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது.

1ம் இராசராசனின் மகன் இராசேந்தி ரன் இலங்கையைக் கைப்பற்றிக்கொண்ட போது மாதோட்டநகர் 'இராசராசபுரம்' எனவும், திருக்கேதீச்சர ஆலயம் 'இராசரா சேச்சரம்' எனவும் பெயர் பெறலாயிற்று.

இவ்வித சிறப்புடன் விளங்கிய ஆல யம் கி. பி. 1545 ல் திடீரென கடல் பொங்கியெழுந்து, மாதோட்டத்தின் பகு திகள் சிலவற்றை மூடியது. ஆனால், ஆல யம் மட்டும் கி. பி. 1585 வரை நித்திய பூசைகளுடன் இடையூறின்றி நடைபெற் றதென நம்பப்படுகிறது. திடீரென போர்த் துக்கேயர் ஆலயத்தில்புகுந்து, பொன் னாபரணம் போன்ற பல்வேறு பொருள் களைக் கொள்ளையடித்து. சிலைகளை யும், விக்கிரகங்களையும் அழித்து, திருக் கோயில் மதில் கோபுரம் போன்றவற்றை பீரங்கிகளால் தாக்கித் தரைமட்ட மாக்கினர்.

சில ஆண்டுகளுக்கெல்லாம் திருக்கே தீச்சரப் பகுதிகளில் மண்மாரி பெய்து மண்ணும் மூடியது. பின்னர் காடாகியது. கி. பி. 16ம் நூற்றாண்டில் இருந்து 19ம் நூற்றாண்டு வரை சுமார் 300 ஆண்டு கள் ஆலயத்தின் திருப்பெயரையே ஈழம் வாழ் சைவர்களும், பிறரும் கேளாதிருந் தனர். இக்காலம் வரை திருக்கேதீச்சர நாதரும் தேவாரத் திருவுருவில் மட்டும் உறைந்தார்.

கி. பி. 1872ல் நாவலர் பெருமான் சைவமக்களுக்கு ஒரு விஞ்ஞாபனம் விடுத் தார் அதில் 'மாதோட்டத்தில் திருக்கே தீச்சரம் எனும் தேன் பொந்து ஒன்றுள் ளது. அதனைச் சென்றடையுங்கள்'' எனக் குறிப்பிட்டிருந்தார். இதன் காரணமாக சைவப் பெருமக்கள் மத்தியில் உத்வேகம் ஏற்பட்டது.

திருக்கேதீச்சரத்திற்குச் சொந்த மான 40 ஏக்கர் நிலத்தை வடமாகாண அரசுப் பிரதிநிதி சேர். வில்லியம் துவை னம் துரை 13-12-1893ல் பகிரங்க ஏலத்தில் விட்டார். கத்தோலிக்க குரு மார்களின் போட்டிக்கு மத்தியில் பழனி யப்பச் செட்டியார் 3100 ரூபாவிற்கு வாங் கினார். இதனை அடுத்து பசுபதிச் செட் டியார் 1984ம் ஆண்டு தை மாதம் காடு வெட்டி, நிலத்தைச் சோதனை செய்த போது பழைய கோயிலின மூலப்பகுதி அர்த்த மண்டபம. மகாமண்டபம், பலி பீடம், முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. அப்போது சோழர் காலக் கிணறும் கண்டு பிடிக்கப்பட்டது. அத்துடன் சிவலிங்கம், நந்தி, விநாயகர் கற்சிலைகளும், சிவ பூசைப் பாத்திரங்களும் கிடைத்தன.

பசுபதிச் செட்டியாரின் பெரு முயற் சியால் சுவாமி கோயில், அம்மன் கோயில் மடைப்பள்ளி முதலியன கட்டப்பட்டன. காசியிலிருந்து சிவலிங்கம் கொண்டுவரப் பட்டு, முன்னர் மூலஸ்தானம் இருந்த இடத்திலேயே காசிலிங்கத்தையும் அமைத்து முன்பு கிடைத்த விக்கிரகங் களை முறைப்படி அமைத்து, 28-06-1903ல் மகாகும்பாபிடேகம் செய்து வைத்தார். பின்பு சிவாகம முறைப்படி நித்திய பூசை களுக்கு ஆவன செய்தார். தொடர்ந்து திருப்பணிகள் செய்யப்பட்டு 1910ல் மீண் டும் புதுப்பொலிவுடன் கும்பாபிடேகம் செய்து வைத்தார்.

இதன் பின் பொலிவுடன் விளங்கிய இவ்வாலயம் பல ஆண்டுகள் கழிந்தபின் திருப்பணிகள் எதுவுமின்றி சிதைந்து வரலாயிற்று. இதனைக் கண்ட சைவப் பெருமக்கள் 1948ல் திருக்கேதீச்சர புன ருதத்தாரண சபையை நிறுவினர். இச் சபையின் பெருமுயற்சி காரணமாக 31-10-1960ல் இன்றுள்ள ஆலயத்தின் சுற்றுப்பிரகாரங்களில் மூர்த்திகள் பிர திட்டை செய்யப்பட்டு, கும்பாபிடேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆகம முறைப்படி பூசைகள் இடம்பெற்று வந்தன.

இத் திருப்பணிச்சபையின் தொடர் முயற்சியின் பேறாக இந்தியாவிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு இராசகோபு ரம், மணிக்கோபுரம், அமைக்கப்பட்ட துடன், திருக்கேதீச்சரநாதருக்கு அழகிய தேரும் உருவாக்கப்பட்டு, இந்தியாவிலி ருந்து விக்கிரகங்களும் வரவழைக்கப்பட் டன. அத்துடன் சுற்றுமதில்கள் கட்டப் பட்டதுடன், கருப்பக்கிருகம், அர்த்த மண்டபம் என்பனவற்றையும் கருங்கல் லால் கட்டி 04-07-1976ல் பூரண பொலி வுடன் கும்பாபிடேகம் செய்யப்பட்டது.

திருக்கோயிலுக்கு வடக்கே கோயில், நந்தவனம், பிராமணர் குடியிருப்புக்களும், நூல் நிலையம், என்பனவும், கிழக்கே சம் பந்தர், சுந்தரர், திருவாசக, சிவராத்திரி மடங்களும், சிவானந்த குருகுலப் பாட சாலை என்பனவும் அமைந்துள்ளன.

இராசகோபுரத்துக்கு இருமருங்கிலும் சூரியர், சந்திரர்களுக்கு சந்நிதிகள் உண்டு. நவக்கிரக மண்டபம், சண்டேசுவரர் கோயில் அமைக்கப்பட்டுள்ளன. 72 நாயன்

மார்கள் சேக்கிழார், சந்தானகுரவர். என்போர் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள னர். மேல்பிரகாரத்தில் விநாயகர், சோமஸ்கந்தர், மகாவிஷ்ணு பழைய மகா லிங்கம், மகாலட்சுமி என்போர் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளனர். கருப்பக்கிருகத்தின் வெளிச் சுவரின் தென்பக்கத்தில், தட் சணாமூர்த்தி, மேற்புறத்தில் லிங்கோற்ப வர், வடபால் துர்க்காதேவி அமைக்கப் பட்டுள்ளனர். மகாமண்டபத்தில் விநாய கர், சுப்பிரமணியர், வேணுகோபாலர் இராசேஸ்வரி, பிரதோஷமூர்த்தி,சண்டேஸ் வரர் போன்ற உற்சவ மூர்த்திகள் உள்ள னர்.

நித்திய பூசைகளாக திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்பன இடம் பெறுகின் றன. இவற்றுடன் நித்திய பிரதோஷம், சாயரட்சை, நைமித்திய பிரதோஷம் என் பனவும் இடம்பெறும். இப்பூசைகள் தேவஸ் தானத்தாராலும், உபயகாரர்களினாலும் நடத்தப்பெற்று வந்துள்ளன.

நைமித்திய பூசைகளாக வருடப் பிறப்பு, சித்திரை உற்சவவிழா, நடேசர் அபிடேகம், சேக்கிழார் குருபூசை, ஆனி உத்தரவிழா, ஆடி அமாவாசை, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, ஐப்பசி வெள்ளி' நால்வர் குருபூசை, நாவலர் குரு பூசை, மகா சிவராத்திரி என்பன இடம் பெறுகின்றன. பஞ்சமுக அர்ச்சனை, இலட் சார்ச்சனை என்பனவும் சிறப்பாக இடம் பெற்றன.

இத்தலம் மூர்த்தி, தீர்த்தம், தலச் சிறப்புப் பொருந்தியது. மூலஸ்தான சுயம்பு வடிவான சிவலிங்கப் பெரு மானுக்கு தென்கைலாயநாதர், கேதீச்சர நாதர், மாதுவட்டாபுரநாதர், கௌரி நாதர் முதலிய திருநாமங்கள் உண்டு. ''மத்தம் மத யானையுரி போர்த்த மண வாளன்'' என்பது சுந்தரர் தேவாரம்.

ஆதியில் நாகர் குலத்தவர் பூசித்த தால் நாகநாதர் என்றும், மாதோட்ட மருந்து என்றும் ''கேழல் வெண்மருப்பு அணிந்த நீண்மார்பர் கேதீச்சரம் பிரி யாரே'' எனும் சம்பந்தர் தேவாரமும் மூர்த்திச் சிறப்பை எடுத்துக் காட்டுவன வாகும். கௌரி அம்மையுடன் எழுந்தருளி யுள்ள திருக்கேதீச்சரநாதர் அன்பர்களின் முன்னைய கொடுவினைகளைப் போக்கு வதுடன் அவர்களின் உடலிலுள்ள தீராத நோய்களையும் போக்குபவர் என்பதை 'பாவம் வினை அறுப்பார் பயில்......, அங்கத்துறு நோய்கள்...'' எனும் சுந்தரர் தேவாரமும் மூர்த்திச் சிறப்பை விளக்கு கின்றது.

பாலாவித் தீர்த்தம் புனிதத்தன்மை வாய்ந்தது. இத் தீர்த்தத்தில் மூழ்கி வழிபாடு செய்பவர்களின் பாவங்கள், நோய்கள், துன்பங்கள் நீங்கும். அவரது 21 தலைமுறை ஈடேறும். கல்வி, செல்வம், மனைவாழ்வு சிறக்கும். துவட்டா, மயன், அகத்தியர், திருமால், பிரமன், கேது, இராவணன், இராமன், மண்டோதரி என் போர் இத் தீர்த்தத்தால் இட்ட சித்திகள் பெற்றனர்

*தவராசா தவநீதன்*
ஆண்டு 11 'B

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்''

— பாரதி

# திருவாசகத்தின் சிறப்பு

பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறையாக வைத்தெண்ணப்படும் திருவாசகம், மாணிக்கவாசகரால் இயற்றப் பட்டது. ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்'' எனும் அடிப்படையில் உலக இலக்கியங்களில் உள்ள தெய்வக் கவிதைகளுள் தனி இடம் பெறத்தக்கது, இதில் திரு என்ற சொல் லுக்கு ''கண்டாரால் விரும்பப்படும் தன்மை'' என திருச்சிற்றம் பலக் கோவை யாரில் பொருள் கூறப்படுகின்றது.

தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச் செய்து. அவரைப் பேரின்பப் பெருக்கின் கண் ஆழ்த்துதற்கு எந்த நூலுக்கும் இல்லாத அழகினை இத்திருவாசக நூல் கொண்டுள்ளமையால் இதனிலும் மேலான அழகினைப் பெற்ற வேறொரு நூல் இல்லை என்று திருவாசகத்தின் அமைப் பினையும் அழகினையும் வியந்து பாராட்டு கின்றார் மறமலை அடிகளார்

''வாட்டமிலா மாணிக்க வாசகனின் வாசகத்தைக் கேட்ட பொழுதங்கிருந்த கீழ்ப்பறவை சாதிகளும் வேட்ட முறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான நாட் டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப் பன்றோ.''

என்று மனங் கசிந்து உருகுகின்றார் இராமலிங்க சுவாமிகள்.

திருவாசகத்தின் ஆற்றலுக்கு நிகர் எதுவுமில்லை. இத்திருவாசகத்தேன், தொல்லைதரும் பிறவித்தளையை நீக்கும்; அல்லல் அறுக்கும்; ஆனந்தமாக்கும்; ஓது பவர் கருங்கல்மனமும் கரையும்; கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரியும்; மெய் சிலிர்ப் படையும்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிப்படுத்தும்.

திருவாசகம் சிவபுராணம் தொடங்கி அச்சோபதிகம் ஈறாக 5, பிரிவுகளில் 4 அகவல்களும் 652 விருத்தங்களுமாக 656 பாடல்களைக் கொண்டது.

திருவாசகத் தேன் என்று ஆன்றோர் களால், அறிஞர்களால், பராட்டப்படு கின்றது.

வேத ஆகம உபநிடதங்களில் இருந்து வாதவூரர் ஆகிய வண்டு திருவாசகம் ஆகிய தேனை சேர்த்தெடுத்து எமக்கு வழங்கி உள்ளதாக வாதவூரரை வண்டாக உருவகித்து பாராட்டுகின்றார் வாரியார் சுவாமிகள். பல மலர்களில் இருந்து வண்டு சேகரித்து வைத்ததேன் எவ்வாறு உடற் பிணியை அகற்றுகின்றதோ அது போன்றே திருவாசகத்தேன் உயிருக்கேற்படும் பிணியை அறுக்க வல்லது.

இதனை உணர்த்துவது போல் தேன் என்ற சொல்லை பல இடங்களில் மாணிக்க வாசகர் எடுத்தாளுகின்றார்.

சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று.

தேசனே தேனார் அமுதே சிவபுரனே.

உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே.

தேனாய் இன்னமுதாய் தித்திக்கும் சிவபெருமான் என்றெல்லாம் போற்றி. இறைவன் அடியவர்களின் சிந்தையுள் தேன்போல கலந்து நின்று பிறப்பை ஒழிப் பவன் என்கின்றார்.

''தேனுக்குள் இன்பம் செறிந்திருந் தாற் போல் நமது ஊனுக்குள் இறைவன் ஒளித்திருந்தானே'' என்றார். திருமூலர்

மாணிக்க வாசகர் வண்டை விளித்து பாடிய பாடல் ''திருக்கோத்தும்பி'' எனும் தலைப்பில் அமைகின்றன.

''தினைத்தனை உள்ளது ஓர் பூவினில்
தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண் தொறும்பே சுந்
தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத்
தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே – சென்றூதாய்
கோத்தும்பீ -

வண்டைப் பார்த்து வண்டே ! பல மலர்களில் உள்ள சிறிதளவு தேனுக்காக எவ்வளவு சுற்றுகின்றாய் இப்படி மலருக்கு மலர் அலைவதை விட ஒரேமலரை - அந்த ஒப்பற்ற மலராகிய அம்பலத்தாடும் கூத்தனின்பாத கமலத்தை நீ சென்றடை. அங்கு சென்று பண்பாடு உனக்கு எங்குமே கிடைக்காத தேன் அப்பாதமலரில் இருந்து பிலிற்றும். தேன் நினைத்தாலும் கண்டாலும் பேசினாலும் இனிக்கும் குன்றாச்சுவை எலும்பை உருக்கும் என்கின்றார்.

இவ்வுலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் பெண்மையின் இருப்பிடமாகவும் பரம் பொருளான சிவனை ஆண்மையின் இருப்பிடமாகவும் கொண்டு இவ்வுலக உயிர்களனைத்தும் இறைவனோடு இரண்டறக் கலக்கும் எனும் ஆர்வத்தை அகத்துறை மரபில் நின்றும் நாயன் மார்களும் ஆழ்வார்களும் பாடி உள்ளனர். நாயக நாயகி பாவனைப் பாடல்களை மாணிக்க வாசகரும் பாடி உள்ளார். பெண்மை நிலையில் நின்று இறைவனுடன் கலக்கத் துடிக்கும் துடிப்பை அம்மானைப் பாடல் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

''சூடுவேன் பூங் கொன்றைச் ஆடிச்
சிவன் திரள தோள் கூடுவேன் கூடி
முயங்கி நின்று ........

என்று பாடுகையில் ஒரு பெண்ணின் துடிப்பை உணரமுடிகின்றது. அம்மானை, தெள்ளேணம், சாழல் பொன்னூசல் பூவல்லி முதலிய விளையாட்டுக்களின் போது பெண்கள் பாடுகின்ற முறையில் அமைத்துள்ளார். பெண்கள் கை கொட்டி விளையாடுவது சாழல் என்பதாகும். இரு பெண்கள் விளையாடும் போது ஒரு பெண் கேள்வி கேட்பது போலவும் இன்னொரு பெண் அதற்கு விடையிறுப்பது போலவும் சாழல் பாடலை அமைத்துள்ளார்.

முதலாவது பெண் :-

தோழி எல்லோர்க்கும் தலைவனாக உள்ள ஈசன் கிழிந்த துணிகளை கோவணமாய் தைத்து உடுத்தியிருப்பதேன்.

இரண்டாம் பெண் :-

அவன் அணிந்திருப்பவைகளை எளிமையாக எண்ணாதே. நான்கு வேதங்களையே அரை நாணாகவும் நிலைபெற்ற கலைகளில் பொதிந்திருக்கும் மெய்ப்பொருளையே கோவணமாகவும் அணிந்துள்ளான் என்பதை அறியாயோ

''என்னப்பன் எம்பிரான் எல்லோர்க்கும்
தான் ஈசன்
துன்னம்பெய் கோவணமாய் கொள்ளுமது என்னேடி ?
மன்னுகலை துன்னு பொருள் மறை
நான்கே வான் சரடாத்
தன்னையே கோவணமாய்ச் சாத்தினன்
காண் சாழலோ ,,

முதாலாம் பெண் :-

தில்லையில் ஆடுகின்ற இறைவன் பெண்ணுக்கு பாதி உடம்பைத் தந்தானே அவன் பித்தனல்லவோ.

இரண்டாம் பெண் :-

அடி அசட்டுப் பெண்ணே ! பெண்ணுக்கு பாதி உடம்பினை அவன் தந்திராவிடில் உலகமே அழிந்திருக்குமே இதை அறியமாட்டாயா.

''தென்பால் உகந்தாடும் தில்லைச்
சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன்
காணேடி !
பெண்பால் உகந்திலனேல் பேதாய் !
இருநிலத்தோர்
விண்பாலியோ கெய்தி வீடுவர்காண்
சாழலோ

இறைவன் சிவனும் சத்தியுமாய் நின்று உயிர்களை இயக்காவிடில் உலகமே அழிந்து விடும். உலகில் உள்ள ஆணும் பெண்ணும் இன்பம் துய்க்க மாட்டார்கள். இதனாலே இல்வாழ்வை சிவஞான சித்தியார் ''அவளால் வந்த ஆக்கம்'' என்றார் இங்ஙனம் மிக உயர்ந்த தத்துவக் கருத்துக்களையும் மனிதர்கள் உய்யும் பொருட்டு எளிய இனிய தேனான பாடல்களாக வடித்துத் தந்துள்ளார் மாணிக்கவாசகர். இப்பாடல்களை பண்ணுடன் பாடுவதும் சிவனருள் வேண்டி நிற்றலும் சைவர்களாகிய எங்களின் தனிப்பெரும் கடமைகளாகும்.

''தேனூறும் வாசகங்கள் அறுநூறும்
அமுதூற மொழிந்த
கங்கை நிகர் வாசகனை யாணூறு
படாதவாறு இறைஞ்சிடுவேன்.

– சைவ எல்லப்ப நாவலர் –

பா. அரவிந்தன்
A/L 2000 CO

---

# ஐ. நா. மறுசீரமைப்பு

ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் என்னும் பெயர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பிறாங்க்லின டி. ரூஸ். வெல்ட் அவர்களால் உருவாக்கப்பட்டது. சான்பிரான்சிஸ்கோ நகரில், சர்வதேச நாடுகள் ஸ்தாபனத்தை நிறுவுவதற்கென 1945 ஏப்ரல் 25 ஆம் திகதியிலிருந்து ஜூன் 26 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஐக்கிய நாடுகள் சாசனத்தை உருவாக்கினர்.

1945 ஒக்ரோபர் 24 ஆம் திகதி பெரும்பான்மையான நாடுகளால் இச்சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, உததியோக ரீதியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் செயற்பட்டது. சாசனத்தின் முன்னுரையில் நோக்கங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. 1ஆம், 2ஆம் உலக யுத்தங்களால் ஏற்பட்ட பேரின்னல்களிலிருந்து எதிர்காலப் பரம்பரையைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் மீது நம்பிக்கையை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. சுதந்திரமான சூழ்நிலையில் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒவ்வொருவரதும் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்டல், பொது நன்மைக்காகவன்றி வேறெக் காரணத்துக்காகவும் ஆயுதபலத்தை உபயோகிக்காமை, சகல மக்களின் பொருளாதார, சமுதாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக சர்வதேச அமைப்புகளை இயக்குதல் ஆகிய விடயங்களில் உறுதி கூறப்பட்டது.

ஐ. நா. தாபனம் உருவாக்கப்பட்டு 53 ஆண்டுகள் நிறைவேறியுள்ளன. ஐ. நா. வின் நோக்கங்கள் எந்தளவிற்கு செயற்படுத்தப்பட்டுள்ளன என்பதைச் சிந்திப்பதும் சீர்தூக்கிப் பார்ப்பதும் வேண்டிய ஒன்றாகும்.

ஐ. நா. தாபனத்தில் பாதுகாப்புச் சபை என ஒன்றிருக்கிறது. அமைதியையும், பாதுகாப்பையும் பேணுகின்ற தலையாய பொறுப்பு இதற்குரியது. இச் சபையின் உறுப்பினர்களில் பெரிய வல்லரசுகளுக்கு 'தடையுரிமை வாக்கு' உண்டு. பெரிய வல்லரசுகளின் ஒருமித்த முடிவோடுதான் நடைமுறை முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு வல்லரசு தடையுரிமை வாக்கைப் பயன்படுத்தி, முடிவுகளை எதிர்ப்பின், முடிவுகள் செயலற்றுவிடும்.

பிணக்குகள் யுத்தமாக மாறுமானால், அதனை இயன்றளவு விரைவில தீர்த்து

வைப்பதிலேயே பாதுகாப்புச் சபையின் கவனம் ஈர்க்கப்படுதல் வேண்டும். ஆனால் இச் சபை நிறுவப்பட்டதிலிருந்து பல தசாப் தங்களாகப் பல யுத்தங்களை நிறுத்தியுள் ளது. எனினும் எல்லா நாடுகளிலும் யுத்த மும் அழிவும் ஏற்பட்ட வண்ணமே உள் ளன.

இவற்றை மாற்றிப் பூரண அமைதியை உண்டாக்குவதற்குக் கல்வி, கலை, பண் பாட்டு, அறிவியல் துறைகளுக்கு ஊடாக மனித மனத்தில் சாந்தி, அமைதி, சகிப் புத்தன்மை ஆகிய நல்ல சுபாவங்களைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை 'யுனெஸ்கோ' நிறுவனம் உணர்ந்து செயற் படுகின்றது.

உலகிலுள்ள சிறுவர்களின் உள்ளங் களில் கல்வி மூலம் மனிதப் பெறுமானங் களை வளர்த்தல்வேண்டும். போர் செய்யும் உலகை வேரோடு சாய்த்து, வாழ்வாங்கு வாழ வழிப்படுத்த வேண்டும். மூன்றாவது உலகப்போர் இதுவரை தவிர்க்கப்பட்டிருப் பது அதிர்ஷ்டவசமானது. ஆனால், உலக நாடுகள் பெரும்பாலானவற்றில், சச்சரவு, சண்டை, வன்முறைகள் உள்நாட்டுப்போர் என்பன பெருகி வருகின்றன. நாடுகளுக்கு இடையே பிணக்குகள், சண்டைகள் என் பன அதிகரித்த வண்ணமேயுள்ளன. உல கில் பல நாடுகளில் மக்கள் அமைதியும், நிம்மதியும், பாதுகாப்பும் எப்போது வரு மென்று ஏங்கித் தவிக்கும் பரிதாப நிலை யிலேயே உள்ளனர்.

உள்நாட்டுப்போர், அயல் நாட்டு மோதல் என்பவற்றால் அகதிகளாகி அவ லப்படும் மக்கள் தமக்கு சாதாரண இயல்பு வாழ்க்கை எப்போது கிடைக்குமென்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் ஐ. நா. சபை இயங்குவதற்குப் போதிய நிதி வள மும் இல்லை. ஐ. நா. சபை தலையிடும் உள்நாட்டு விவகாரங்கள், பிணக்குகள், பூசல்கள், மோதல்கள், போர்களை முடி வுக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக மோசமுறவே வைக்கின்றன. எடுத்துக் காட்டாக சோமாலியா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் ஐ. நா. வின் கையாலா காத்தனமும், பலவீனமும் வெளிச்சம் போடப்பட்டுள்ளன. எனவே, ஐ. நா. வின் மறுசீரமைப்பு பற்றி உலகம் உணர்ந்து செயற்பட வேண்டிய நேரம் நெருங்கி வரு கிறது.

*தயாபரமூர்த்தி ஹரிசாந்தன்*
ஆண்டு 12 - 2000

---

# சனத்தொகைக் கோட்பாட்டுப் பகுப்பாய்வு

சனத்தொகை ஆய்விலே கோட்பாட் டுப் பகுப்பாய்வு சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. சனத்தொகையின் வளர்ச்சி, அசைவியக்கம், மாற்றங்கள் முதலியவை ஆய்வறிவாளர்களினால் எவ்வாறு கிரகிக் கப்பட்டுள்ளன என்பதைக் கோட்பாட்டுப் பகுப்பாய்வு தெளிவாகக் காட்டுகின்றது.

சனத்தொகைக் கோட்பாட்டுப் பகுப் பாய்வில் பண்டைத் தமிழரது சிந்தனை கள், கிரேக்கச் சிந்தனைகள், உரோம சிந்தனைகள், மால்தூசியக் கோட்பாடு, மார்க்ஸியக் கோட்பாடு, உத்தம அளவுக் கோட்பாடு, சனப்புள்ளியியல் நிலை மாற் றக் கோட்பாடு, உயிரியற் கோட்பாடு, மைகல் தோமஸ் சாட்வரின் கோட்பாடு, டபிள்டேயின் உணவுக் கோட்பாடு, லொயிஸ்ரிக் வளையிக் கோட்பாடு, ஹேபர்ட் ஸ்பென்சரின் கருவளவாக்கச் செயல் முறைக் கோட்பாடு, கஸ்ரோவின் புரத நுகர்வுக் கோட்பாடு முதலியவை சிறப்பிடம் பெறுகின்றன.

மனிதவளம் பெறுமதியும், சிறப்பும் மிக்கதென்பதைச் சங்கநூல்கள் தெளிவாக

அறிவுறுத்தி நிற்கின்றன. இவ்வாறான கருத்து பண்டைய கிரேக்கச் சிந்தனைகளிலும் முகிழ்ந்தெழுந்து காணப்பட்டது. சனத்தொகை அதிகரிக்கும் பொழுது மனித உழைப்பாற்றலும் அதிகரிக்கும் பாங்கினை பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற தொல்சீர் சிந்தனையாளர் விளக்கிக் கூறினர். நாட்டைப் பாதுகாப்பதற்குரிய வல்லவர்களின் படையணியைத் திரட்டிக் கொள்வதற்கு சனத்தொகை அவசியம் என்ற கருத்து உரோம சிந்தனையாளர்களிடம் நிலவியது.

சனத்தொகை பற்றிய மத்தியகால ஐரோப்பிய சிந்தனைகள், குடியேற்றநாட்டு ஆட்சி விரிவாக்கம், வர்த்தக விரிவாக்கம், உற்பத்தி விரிவாக்கம் முதலியவற்றுடன் கொண்டிருந்தன. நாடுகளின் பலம் சனத்தொகைப் பலத்திலே தங்கியுள்ளது என்ற கருத்து மீளவலியுறுத்தப்படலாயிற்று. இவற்றின் பின்புலத்திலே பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததான உலகப்புகழ் பெற்ற கோட்பாட்டினை மால்தூஸ் வெளியிட்டார். பின்வரும் பொருளியல் அவதானிப்புக்களின் அடிப்படையில் அவர் தமது கோட்பாட்டை வெளியிட்டார்.

1) நிலத்திலிருந்து பெறப்பட்ட விளைச்சல் வீழ்ச்சியடைந்து சென்றமை பற்றிய நோக்கு.
2) உணவு இன்றி மனித வாழ்வு நீடிக்க முடியாதென்ற அவதானிப்பு.
3) இயற்கை நிகழ்வுகள் மனித வள இழப்பை ஏற்படுத்தியமை பற்றிய ஆய்வு.
4) மனித நடவடிக்கைகளே மனிதவள இழப்புக்குக் காரணமாக அமைதல் பற்றிய நோக்கு.

சனத்தொகை கேத்திர கணித நியமப்படி பெருகிச் செல்கின்றது என்றும், ஆனால் உணவு உற்பத்தி கூட்டல் அடிப்படையில் மட்டும் கூடுகின்றது என்றும், இவற்றால் சனத்தொகைப் பெருக்கம், உணவு நெருக்கடிக்கும் பஞ்சத்துக்கும் இட்டுச் செல்கின்றது என்றும் மால்தூஸ் குறிப்பிட்டார். உணவு உற்பத்திக்கும் சனத்தொகைக்குமுள்ள நேரடியான தொடர்பைப் பகுப்பாய்வு செய்து வெளியிட்டமை மால்தூஸின் ஆய்வுகளுக்குச் சர்வதேசக் கவன ஈர்ப்பை ஏற்படுத்தியது. இயற்கையின் சீற்றங்களும், யுத்தங்களும், மீளா நோய்களும் சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் அவசியமான வலுக்கள் என்றும் அவர் விளக்கினார். பின் வந்த ஆய்வாளர்கள் அவருடைய கோட்பாட்டிலுள்ள வழுக்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். இவ்வகையில் மார்க்ஸியக் கோட்பாடு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

முதலாளித்துவத்தின் சுரண்டல் இயல்புகளே வறுமை, பஞ்சம், வேலையின்மை, உணவு ஊட்டக்குறைவு முதலியவற்றை ஏற்படுத்துகின்றதென்றும், முதலாளித்துவத்தை ஒட்டுமொத்தமாக ஒழிப்பதனால் மட்டுமே சனத்தொகைப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வைக் காண முடியும் என்றும் மார்க்ஸியவாதிகள் குறிப்பிடுகின்றார்கள். சனத்தொகை என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சியோடு தொடர்புபடுத்தப்பட்டுச் சனத்தொகைப் பெருக்கம் சுமையா? பலமா? என்பது தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென உத்தம அளவுச் சனத்தொகைக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. சனத்தொகையின் உத்தம அளவைக் கண்டறிவதற்குரிய திட்ப நுட்பமான கணித அளவீடுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

சனப்புள்ளியியல் நிலை மாற்றக் கோட்பாடானது மூன்று பிரதான கால கட்டங்களை அடியொற்றிச் சனத்தொகையை விளக்குகின்றது.

அவை;

அ) பூர்வீக காலம்
ஆ) இடைக்காலம்
இ) நிலை மாறும் காலம்

மேற்கூறிய மூன்று காலப் பகுதியிலும் சனப் பெருக்கத்துக்குரிய தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக இன்றைய உலக நாடுகளில் பின்வரும் சனத்தொகை இயல்புகள் காணப்படுகின்றன.

1 – பிறப்புவீதம் அதிகரித்து, இறப்பு வீதம் குறைவதால் கூடிய சனப்பெருக்கை அனுபவிக்கும் நாடுகள்.

2- பிறப்புவீதம் குறைந்தும் இறப்பு வீதம் குறைந்தும் மெதுவான சனப் பெருக்கை அனுபவிக்கும் நாடுகள்.

3 – பிறப்பு, இறப்பு வீதங்கள் வேக மாக வீழ்ச்சியடையும் நாடுகள்

மேற்கூறிய இயல்புகள் நிலை மாறும் காலத்துக்கு முந்தியநிலை, நிலைமாறும் காலம், நிலைமாற்றத்துக்குப் பிந்திய நிலை என்று விரித்துரைக்கப்படும்.

மைகல் தோமஸ் சாட்லர், டபிள்டே, றேமண்ட் பேள், லொவல் றீட், கொர டோகினி, ஹேபேட் ஸ்பென்சர், கஸ்ரோ முதலாம் சனத்தொகை வல்லுனர்கள் உணவு ஊட்டம், கரு வளர்பண்பு, உயிர்ப் பாரம்பரியம், உயிர்ச்சூழலியல் முதலாம் உயிரியற் கண்ணோட்டங்களில் சனப்பெருக் கத்தை விளக்கியுள்ளனர்.

மேற்கூறிய கோட்பாடுகள் ஒவ்வொன் றிலும் தனிச்சிறப்புப் பண்புகள் காணப் படுதல் போன்று வரையறைகளும் விரவி யுள்ளன.

இலங்கையில் நிகழ்ந்து வந்துள்ள கல்வி விரிவாக்கம், நலவசதிகளின் விரிவாக்கம், பொழுது போக்குச் சாதனங்களின் விரி வாக்கம், விழுமிய மேம்பாடுகள் முதலி யவை பிறப்பு வீதத்தையும், இறப்பு வீதத் தையும் குறைத்து வருகின்றன. இத்தகைய போக்கு ''அபிவிருத்தி ஆர்முடுகல் நிலைச் சனப்பெருக்கம்'' என்று கூறப்படும்.

ஞானானந்தம். ஞானசொரூபன்
ஆண்டு 13 (1999)
(வர்த்தகம்)

---

# தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறம்

தமிழ் என்றால் இனிமை அன்பு எனப் பொருள்படும். தேனினும் இனிய செந்தமிழ் எங்கள் தாய்மொழி. தமிழ் பேசும் தமிழ்க்குடி '' கல்தோன்றி மண தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி'' என்று புறப்பொருள் வெண்பாமாலை புகலுகிறது. பெருமையும் தொன்மையும் வாய்ந்த நம்குடி மக்கள் அறவாழ்வு வாழ்ந்தார்களென்பதை எங்கள் தமிழ் இலக்கிய முதுசொம்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு, பெருங்காப்பியம், சிறு காப்பியம் இதிகாசபுராணங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இலக்கியம் என்பது இலக்கை இயம்புவது. அதாவது மக்கள் இன்னபடி வாழ்ந்தால் இம்மையில் இன்பமும் புகழும் பெற்று மறுமையில் பேரின்பம்பெற வழி காட்டுகிறது. எனவே வையத்துள் வாழ் வாங்கு வாழவைத்து வானுறையும் தெய் வப் பேற்றிற்கு இட்டுச்செல்வதே இலக்கி யங்களின் இலக்கு என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி மக்கள் வாழ்க் கையை மையமாகக் கொண்டு மலர்ந்தவை. மலர்ந்து வரும் உலகிற்கு மங்காத ஒளி ஊட்டும் ஒளிச்சுடர்களே இலக்கியங்கள். தமிழர் வாழ்விற்கு மட்டுமன்று அகில உலகிற்கே அறிவூட்டும் இலக்கியங்களைத் தமிழ் கொண்டதெனில் அது நமக்குப் பெருமைதரவல்ல தொன்றாகும். திருக் குறள் எண்பத்து நான்கு மொழிகளிலே

மொழிபெயர்க்கப்பட்டிருப்பதும், இதிகாசங்களை மேலை நாட்டார் விரும்பிப் படிப்பதும் உலகறிந்த உண்மையே.

எந்த இலக்கியங்களை எடுத்துக்கொண்டாலும் அவைகள் புருடார்த்த நெறியைப் புகன்று நிற்பதை அவதானிக்க முடியும். அறவாழ்வு புருடார்த்தத்தின் அடிப்படையிலேயே மலர்கின்றது. "அறம்செய விரும்பு" என்று ஔவையும் "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்று வள்ளுவரும் கூறுவது அறத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதும் ஊழ்வினை தப்பாது தன்பயனை ஊட்டும் எனபதுமாகிய மூன்று அறத்தத்துவங்களைத் தன்னகததே கொண்டு நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக மிளிர்கினறது. தலைவிரிகோலமாக அரண்மனை புகுந்த கண்ணகியைக் கண்ட பாண்டிய மன்னன "யாரையோ நீமடக் கொடியோய்" என வினவ, கண்ணகி மன்னவனை நோக்கி

"எள்ளறு சிறப்பினிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கணடீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின்கடை மணியுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகாரென்பதியே"

என்று கூறுவதிலிருந்தும் தன்னுயிரைப் போல் மன்னுயிரை நேசித்த அறப்பண்பு காட்டப்படுவதைக் காணலாம். மணிமேகலை.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவாருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது
பின்னது அற்றோர் உறுவது அறிக"

என்று இயம்புகின்றது. இராமாயணம் சகோதர பாசத்தையும் மாதா, பிதா, குரு, தெய்வம் போற்றுதலையும் அன்பு, வாழ்வு, நீதி, நன்றி மறவாமை, நட்பு, தொண்டு, குலதர்மம் போற்றுதல் என்று இன்னோரன்ன சிறந்த இயல்புகள் எடுத்து நுவலப் படுகின்றது.

அனுமான் இராமபிரானிடத்தே சீதாபிராட்டியைத் தேடிக் கண்டுவருவேன் என உறுதிமொழி புகன்று தேடிக்கண்டு மீண்டு வருகின்றான். அனுமனின் முகக் குறிப்பை ஊகித்து உணர்ந்த இராமபிரான் தேவியைக் கண்டாயா? என்று வினாவுகிறான்.

"விற்பெருந் தடத்தோள் வீரவீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும் பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்"

என்று கூறும்போது கற்பும் பொற்பும் நற்குடிப் பிறப்புமாகிய நல்லறம் காட்டப் படுகின்றது "திட்டிவிடமன்ன சீதையை இன்னும் விட்டுவிட வில்லையா?" என்ற கும்பகர்ணனின் வார்த்தையிலே நீதியும் நேர்மையும் சொட்டுகின்றது.

பாரதகாவியம் சகோதர பாசம் பொறுமை, இறைநம்பிக்கை, நீதி, தர்மம் தலைகாக்கும் என்ற தத்துவங்களை தன்னகத்தே கொணடு மிளிர்கின்றது. பெரிய புராணம் அடியார் பெருமைகூறி அதனூடே அன்பையும் அறத்தையும் போற்றுகிறது. அகப்பொருள் இலக்கியங்களும் புறப்பொருள் இலக்கியங்களும் அககால மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அகத்தே அன்பின் ஐந்திணை வாழ்வும் புறத்தே சிறந்த அரசு, வீரம், கொடை, மன்னர்க்கும் மக்களிற்கும் இடையே உள்ள தொடர்பு என்பன காட்டப்பட்டிருப்பதைக் கண்டுணரலாம். அகத்தே தோழி, தலைவி, செவிலி, நற்றாய், என்போர் அறத்தோடு நின்றதை காணலாம். இங்கு அகஞ் சார்ந்த அறஒழுக்கம் பேசப்படுகின்றது. புறநானூற்றிலே,

''ஆவும் ஆனியற்பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண்
சேர்மின் என அறத்தாறு நுவலும்''

என்ற தொடரிலே அறநெறி சார்ந்த போர்நெறியை காண்கிறோம். கீதோப தேசம் போர்க்களத்தே கண்ணனுக்கும் அர்ஜுனனுக்குமிடையே உரையாடலாய் அமைந்து அர்ஜுனனுக்கு மட்டுமல்ல அகிலத்திற்கே அறம் போதிக்கப்படுகிறது.

இங்ஙனமாகத் தமிழ் இலக்கியங்கள் பாத்திரவார்ப்புக்களூடாக போதனை நெறியாக தத்துவ வழியாக அறிவுரை ஊடாக கற்பனையூடாக அறம் சாற்றி நிற்பது கற்றுணர்ந்து போற்றற்குரியது எனவே

''கற்பவை கற்றுக் கற்றாங் கொழுகுதல்
கற்றோர் இயல்பாம் எனக்கொண்டு''

அறம்சார்ந்த தமிழ் இலக்கியங்களைக் கற்று அறவாழ்வை மேற்கொள்வோமாக.

*இராஜேஸ்வரன் விஜிதா*
ஆண்டு 13 (1999)
கலைப் பிரிவு

# இலங்கையில் பரதக்கலை

இலங்கையிலே பழைய காலந்தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகைகளிலே வளர்ந்து வந்துள்ளன. இங்கு வாழும் சிங்களம், தமிழ் பேசும் மக்களின் இடையே கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் நன்கு வளர்ச்சியுற்றாலும் இசை நடனம், குறிப்பாக சாஸ்திரீய இசை, நடனம் ஆகியன ஆதிகாலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தமைக்குத் தக்க சான்றுகள் இதுவரை கிடைத்தில. எனினும் பௌராணிக மரபின்படி இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக் கொடியோன் எனவும் கூறப்படுகின்றது. அவன் சாமகானம் பாடிச் சிவபெருமானின் திருவருள் பெற்றான் எனவும் கூறப்படுகின்றது. இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் என்ற பெயரே யாழ்பாடி தொடர்பாலேற் பட்டதென்பர். மட்டக்களப்பிலுள்ள பாடு மீன்களின் இசை குறிப்பிடற்பாலது. இவை ஐதீகங்களாயினும் இலங்கைத் தமிழ் மக்களிடையிலே தொன்மையாகவே சாஸ்திரீய இசை நிலவி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே நிலவி வரும் வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்து மரபுகளும் குறிப்பிடத்தக்கவையே.

கி.பி 11 ம் நூற்றாண்டு தொடக்கம் இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட்ட காலகட்டத்தில் இங்கு வாழ்ந்த தமிழர் மத்தியில் சாஸ்திரீய இசை, நடன மரபுகள் காணப்பட்டன. இவை பெரும்பாலும் கோயிற்கலைகளாகவே நிலவி வந்தன. ஆனால் கி.பி 16 ம், 17 ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீசர், ஒல்லாந்த படையெடுப்புக்களால் கோயில்கள் அழிக்கப்பட்டதனால் மதச் சார்பான கலைகளும் மங்கி மறைந்தன. பொலநறுவை, தெவிநுவர போன்ற இடங்களில் இருந்த சைவ, வைஷ்ணவக் கோயில்களில் தேவரடியார்கள் இருந்து இசை, நடனப் பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் இருந்து வந்தன. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய புராதன சிவாலயங்களிலும் தேவரடியார் இருந்தனர் எனலாம்.

கி.பி 11ம் நூற்றாண்டு – கி.பி 16 ம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் நிலவிய பொலநறுவ, யாப்பகூவ, கம்பளை டெடிகம, கோட்டை அரசுகளிலே நிலவிய சாஸ்திரீய நடனம் பரதமாய் இருந்திருக்

கலாம், எனப்பலர் கருத்துத் தெரிவித்து இருக்கின்றனர். இதனைச் சில சிற்பங்க ளில் உள்ள நடன உருவங்களும், சந்தேச தூது இலக்கியங்களும் எடுத்துக் காட்டு கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்து வந்த தமிழ் மன்னர் பரதக்கலையை ஆதரித்து வளர்த்து வந்தனர். இக்காலத்தில் எழுதப் பட்ட வையாபாடல், கைலாய மாலை போன்ற நூல்களில் நடனம் பற்றிய சில குறிப்புக்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் இருந்த பெரிய கோயில்களில தேவர் அடி யார் சமயப்பணிகளும், கலைப்பணிகளும் செய்திருக்கின்றார் என்று எண்ணுவதற்கு இடம் உண்டு. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட வாறு நடனக்கலை ஆதரவின்றி மங்கியது அடுத்து வந்த பிரித்தானியர் காலத்தில் அது மீண்டும் தலைகாட்டியது. சமகாலத் தமிழகத்தைப் போன்று இங்கும் தேவதா சிகள் ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்ந்த னர். இதனால் ஆறுமுகநாவலர் போன் றோர் இக்கலையைக் கண்டித்தனர். தமிழ் நாட்டில் இருந்து தேவதாசிகள் சிலர் வணி கர்களாலும், தரகர்களாலும் இங்கு கொண்டுவரப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது.

கி.பி 19ம் நூற்றாண்டில் யாழ்ப்பா ணத்தில் கனகி என்னும் தேவதாசி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஒரு நர்த்தகியாக விளங்கினார். இவரைப்பற்றி சுப்பையனார் என்னும் புலவர் கனகி புரா ணம் என்னும் அங்கத இலக்கியம ஒன்றைப் பாடியுள்ளார்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதி யில் பரதக் கலையின் மறுமலர்ச்சிக்கு அரும் தொண்டாற்றியவர்களில் கலா யோகி ஆனந்தக் குமாரசுவாமியும் ஒரு வராவர். இவருக்குத் திருவாரூர் ஞானம் என்னும் நடனமாது நடனக்கலை பற்றி அறிவுறுத்தினார் என்று கூறப்படுகிறது. இவர் நடன மாணவர்கள் கற்க வேண்டிய நந்திகேஸ்வரர் இயற்றிய அபிநயதர்ப்ப ணம் என்ற நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1917ல் நியூயோர்க்கில் வெளி யிட்டார். இதனால் பிறநாட்டவரும் இந் திய நடனக் கலையின் சிறப்பினை அறிய வும் கற்கவும் தூண்டினார். மரபு வழிக் கலைஞராகிய தேவதாசிகள் இழிந்தவர் அல்லர். அவர்கள் உயர் சமூக அந்தஸ்து உடையவர்கள் என்ற கருத்தினை விளக்கி கட்டுரை எழுதினார். இவரது சிவநடனம் என்ற கட்டுரைத் தொகுப்பு குறிப்பிடக் கூடியதொன்றாகும். சுவாமி விபுலானந்த ரும் மதங்க சூளாமணி என்னும் நூலிலே பரதம் பற்றி விளக்கியுள்ளார். இவர் பர தம்என்ற பதத்திற்கு விளக்கம் அளிக்கும் போது பண், பாவம், தாளம் என்ற மூன் றும் அடங்கியது பரதம் எனக்குறிப்பிட்டுள் ளார்.

1940ல் கதகளி கலைஞரான கோபி நாத், பரத நாட்டிய மேதை பந்தணை நல் லூர் விஜயலட்சுமி முதலியோர் யாழ்ப்பா ணத்திலும் தமது நடனக் கச்சேரியை நிகழ்த்தியுள்ளார்.

1947ம் ஆண்டு தேவதாசிச் சட்டம் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தேவதாசிகள் கோயில்களில் நடனம் ஆடுவது தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாகக் கோயில்களில் இடம் பெற்று வந்த சதிர், பரதநாட்டியம் பொது மன்றங்களிலும், வேறு மேடைகளிலும் இடம் பெறலாயிற்று. தமிழ் நாட்டில் காணப்பட்ட இப்போக்கு இலங்கையிலும் ஏற்படலாயிற்று. இலங்கையின் பரதக் கலையின் மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர்களில் திரு. ஏரம்பு சுப்பையா, திரு. M.S. பரம், கலைப்புலவர் நவரத்தி னம் திரு. M. கைலாயபிள்ளை, திருமதி மகேஸ்வரி நவரத்தினம், திரு. தொம்ம குட்டி, வீரமணி ஐயர், வீரகத்தி, இராச நாயகம், கலையரசு சொர்ணலிங்கம் ஆகி யோர குறிப்பிடத்தக்கவர்கள். யாழ்ப்பா ணம், கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களில் தனி யார் கலைஞர் நிலையங்களிலும், அரசி னால் அங்கீகரிக்கப்பட்ட கலை நிறுவனங் களிலும் பரதக்கலை இன்று போதிக்கப்படுகி றது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தி னைச் சேர்ந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, வட இலங்கை சங்கீத சபை, மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கலலூரி கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையுடன், பாடசாலைக ளிலும் நடனம் ஒரு பாடமாக ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை மட்டங்களிலும் கற்பிக்கப்படுகிறது.

சோ. சோமகோஜினி
ஆண்டு 13 (1999)

# பணவீக்கம் Inflation

பொருளியலாளர்களாலும் கொள்கை வகுப்போராலும் அரசியல் வாதிகளாலும் மிகக் கூடுதலாக விவாதிக்கப்படுகின்ற ஒரு விடயமாகப் பண வீக்கம் அமைந்துள்ளது. ஆனாலும் பொருளியலாளர்களால் பண வீக்கத்திற்கான காரணங்கள் கண்டுபிடிப்பதற்கோ அல்லது அதற்கான பரிகாரங்களை முன்வைப்பதிலோ பொருளியல் விஞ்ஞானமானது இன்னும் வெற்றியளிக்கவில்லை. P. J. Curwen என்பவரின் கருத்துப்படி பணவீக்கத்தை கண்டுபிடிப்பதில் பொருளியல் விஞ்ஞானம் எப்பொழுதுமே மிக ஆரம்ப நிலையில் உள்ளது. பொதுவான அர்த்தத்தில் பணவீக்கம் என்பது 'பொதுவிலை மட்டத்தின் தொடர்ச்சியான உயர்வே எனக் கூறப்படுகின்றது. ஆனால் தொடர்ச்சியான விலை உயர்வு எல்லாம் பணவீக்க அறிகுறி அல்ல.

Gardner என்பவரது கருத்துப்படி 'தொடர்ச்சியான கணிசமானதுமான விலைமட்டத்தின் உயர்வே பணவீக்கம்' என வரையறுக்கப்படுகின்றது. Coulborn என்பவரின் கருத்துப்படி 'அதிகளவான பணம் அதி குறைந்த தொகைப் பண்டத்தை விட்டுத் துரத்தல் பணவீக்கம், என வரையறை செய்கிறார். Crowther என்பவரின் கூற்றுப்படி 'பணத்தினது பெறுமதி தொடர்ச்சியான வீழ்ச்சியே பணவீக்கம்'' எனப்படுகிறது.

இவர்கள் அனைவரதும் கருத்துப்படி தொகுத்து நோக்கும் போது பொருள்கள் சேவைகள் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதே பணவீக்கம் எனப்படும். எனவேதான் இதனை விலைவீக்கம் எனவும் அழைக்கப்படும். மேலும் பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்றது என்பதனை வெளிப்படுத்துவதாக அமையும். இது இரு வகைப்படும்.

1) வெளிப்படையான பணவீக்கம்
2) அமுக்கப்பட்ட பணவீக்கம்

பொருளாதாரத்தில் பொருள்கள் சேவைகளின் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதை கொண்டு பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகிறது என அறிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல் வெளிப்படையான பணவீக்கம் எனப்படும்.

அமுக்கப்பட்ட பணவீக்கம் என்பது விலை கட்டுப்பாட்டு மானியம் வழங்கல் பங்கீட்டு திட்ட முறை போன்ற நடவடிக்கைகளினால் பொருள்கள் சேவைகளின் அதிகரிப்பு கட்டுப்படுத்தப்படும் என்பதாகும்.

பணவீக்கமானது பின்வரும் காரணங்களால் உருவாகின்றது.

1) கேள்வி தூண்டல் பணவீக்கம்
2) நிரம்பல் தூண்டல் பணவீக்கம் / செலவு தூண்டல் பணவீக்கம்.
3) எதிர்பார்க்கை பணவீக்கம்
4) இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம்
5) பாய்ச்சல் பணவீக்கம்
6) துறைசார் பணவீக்கம்

போன்ற வழி முறைகளில் பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படுகிறது.

1) கேள்வித் தூண்டல் பணவீக்கம்:-

கேள்வித் தூண்டல் பணவீக்கம்என்பது ஒரு நாட்டின் உற்பத்தி மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பிலும் பார்க்க அவ் உற்பத்தி பொருளை கொள்வனவு செய்வதற்காக கேள்வி மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு கூடுதலாக இருக்குமிடத்து பொருளில் விலைகள் அதிகரிக்க ஏதுவாகிறது.' இதனையே கேள்வித் தூண்டல் பணவீக்கம் எனப்படுகின்றது. இதற்கு பின்வரும் காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன.

1) பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு.
2) தனியார் நுகர்வுச் செலவு அதிகரித்தல்
3) அதிகரித்துச் செல்லும் அரசின் செலவீடுகள்
4) தனியார் முதலீட்டுச் செலவினங்கள் அதிகரித்தல்.

போன்றன கேள்வித் தூண்டல் பணவீக்கத்திற்கு பின்னணியாக இருக்கின்ற அடிப்படைக் காரணங்களாகும்.

2) நிரம்பல் தூண்டல் பணவீக்கம்:-

நிரம்பல் தூண்டல் பணவீக்கம் என்பது 'பண்டங்களின் உற்பத்தி செலவில் ஏற்படும் அதிகரிப்பினால் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிக்கின்றது' என்பதாகும். இதனை செலவுத்தூண்டல் பணவீக்கம் எனவும் அழைப்பர். நிரம்பல் தூண்டல் பணவீக்கத்திற்கு பின்னணியாக காணப்படும் காரணமாக

1) மூலப்பொருள்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.
2) எரிபொருள்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு
3) தொழிலாளருக்கான கூலி அதிகரிப்பு.
4) போக்குவரத்து செலவுகள் அதிகரித்தமை.

போன்றவை கூறப்படும். ஒரு பண்டத்தின் உற்பத்திச் செலவில் தொழிலாளருக்கான கூலி முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதனால் தொழிலாளருக்கான கூலியை அதிகரிக்கின்ற பொழுது உற்பத்தி செலவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுகிறது. இதனால் பொருள்கள் சேவைகள் அதிகரிக்க ஏதுவாகும். எனவே தான் நிரம்பல் தூண்டல் பணவீக்கத்தை கூலித் தூண்டல் பணவீக்கம் எனவும் அழைப்பர்.

இந்தக் கோட்பாடு புதிய பணவீக்கக் கோட்பாடு என பாராட்டப் பட்டாலும் இக் காரணத்தை விளங்காமல் விலை உயர்வு என்ற விளைவினையே விளக்குவதால் அதனைக் குறைபாடுடைய கோட்பாடு என குற்றம் சாட்டப்படுகிறது.

3) எதிர்பார்க்கைப் பணவீக்கம்:-

எதிர்காலத்தில் பண்டங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என மக்கள் எதிர்பார்க்கின்ற பொழுது அவர்கள் பொருள்கள் சேவைகளுக்கான கேள்வியை அதிகரிப்பர். இதனால பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருள்கள் சேவைகளுக்கான விலை அதிகரிக்க ஏதுவாகின்றதாகும்.

4) இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம்:-

உலக சந்தையில் நிலவும் பணவீக்கத்தினால் இறக்குமதி பொருள்களின் விலை அதிகரிப்பினால் உள்நாட்டில் பணவீக்கம் ஏற்பட ஏதுவாக அமைகின்றமை.

5) பாய்ச்சல் பணவீக்கம்:-

இயற்கை அழிவுகளால் உற்பத்தி பாதிக்கப்படல் அதாவது வெள்ளப்பெருக்கு, வரட்சி, ஆகிய இரு காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்படுவதனாலும் யுத்த சூழ்நிலைகளாலும் உற்பத்தி பாதிக்கபடுவதனாலும் பொருட்கள் சேவைகளின் விலை மிக வேகமாக அதிகரித்து செல்லுதல்.

6) துறைசார் பணவீக்கம்:-

நாட்டின் ஒரு துறையில் ஏற்படும் விலைமட்ட அதிகரிப்பு ஏனைய துறைகளிலும் அதிகரிப்பிற்கு ஏதுவாக அமைதல்.

உதாரணமாக கைத்தொழில் துறைசார்ந்த உள்ளீடுகளில் விலை அதிகரிக்குமானால் விவசாய துறைசார்ந்த பண்டங்களின் உற்பத்தி செலவு அதிகரிப்பதனால் விவசாய துறை சார்ந்த பொருள்கள் சேவைகளின் விலை அதிகரிக்க ஏதுவாகிறது.

1. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது மக்களின் வாழ்க்கை செலவு அதிகரிப்பதனால் அவர்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகின்றது.

2. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது மெய்வருமானம் வீழ்ச்சியடைய ஏதுவாகும். அதாவது பணவீக்க வீதத்தினை விட வருமான அதிகரிப்பு வீதம் குறைவாக இருப்பின் மெய் வருமானம் வீழ்ச்சியடைய ஏதுவாகும்.

3. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது பணத்தின் தொழிற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அதாவது பணவீக்க காலத்தில் பணத்தின் கொள்வனவு சக்தி வீழ்ச்சியடைவதால் மக்கள் பணத்தின் கொடுக்கல் வாங்கலில் பயன்படுதல் புறக்கணிப்பர். அதே வேளையில் பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதால் மக்கள் தமது செலவின் ஒரு பகுதியை எதிர்காலத்தில் கொடுக்கல் வாங்கல் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் பெறுமானத் திரட்டாக வைத்திருக்க விரும்பமாட்டார்கள். எனவேதான் பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது பணத்தின் தொழிற்பாடுகள் பாதிக்கப்படும்.

4. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவும் போது கடன் பெற்றோனை விட கடன் கொடுத்தோன் பாதிக்கப்படுகிறான். ஏனெனில் பணவீக்க காலத்தின் பணத்தின் கொள்வனவு சக்தி வீழ்ச்சியடைவதால் கடன் பெற்றோனை விட கடன் கொடுத்தோன் பாதிக்கப்படுகிறான்.

5. பொருளாதாரத்தில் பணவீக்கமானது. காணப்படும் போது உணவு முத்திரை பெறுவோர் பாதிக்கப்படுவர் அதாவது பணவீக்கத்தின் போக்கிற்கு இணங்க உணவு முத்திரையின் பெறுமதியும் அதிகரிக்குமானால் முத்திரை பெறுவோரின் மெய் வருமானம் வீழ்ச்சியடைய மாட்டாது. ஆனால் பணவீக்கத்திற்கேற்ப உணவு முத்திரையின் பெறுமதியும் அதிகரிக்காவிட்டால் உணவு முத்திரை பெறுபவர்களின் மெய்வருமானம் வீழ்ச்சியடையும். மேலும் உணவு முத்திரைக்கு உட்படாத பொருள்களின் விலைகள் அதிகரிப்பதால் உணவு முத்திரை பெறுவோரின் மெய்வருமானம் வீழ்ச்சியடைய ஏதுவாகும்.

6. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது வணிக வங்கி ஒன்றின் நிலையான வைப்பில் அல்லது சேமிப்பு வைப்பில் வைப்புச் செய்துள்ளோர் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என நோக்குதல் வேண்டும்.

அதாவது வணிக வங்கியிலுள்ள நிலையான வைப்பு, சேமிப்பு வைப்புக்கான வட்டி வீதம் பணமாக்க வேகத்திற்கு இணங்க அதிகரிக்குமானால் வணிக வங்கியில் வைப்புச் செய்தோரின் மெய்வருமானம் வீழ்ச்சி அடையமாட்டாது. மாறாக வணிக வங்கிகளில் உள்ள நிலையான வைப்பு அல்லது சேமிப்பு வைப்பு என்பன வற்றுக்கு வழங்கப்படும் வட்டி பணவீக்க வேகத்துற்கு இணங்க அதிகரிக்காவிடில் வணிக வங்கியில் வைப்புச் செய்தோரின் மெய்வருமானம் வீழ்ச்சியடைய ஏதுவாகின்றது.

7. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது சென்மதி நிலுவையில் பாதகமான போக்கு ஏற்பட ஏதுவாகிறது. அதாவது பணவீக்கம் நிலவுகின்ற போது உற்பத்தி செலவு அதிகரிப்பதால் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைகின்றது. மறுபுறத்தில் உள்நாட்டில் பணவீக்கம் நிலவும் போது சார்பளவில் இறக்குமதி பொருள்களின் விலை குறைவாக இருக்குமானால் இறக்குமதி பொருள்களுக்கான கேள்வி அதிகரிக்கும்.

இதனால் இறக்குமதிச் செலவு அதிகரிக்கும். எனவே பணவீக்கத்தினால் ஏற்றுமதி வருமானம் குறைவடைய மறுபுறத்தில் இறக்குமதி செலவு குறைகின்றது. இதனால் சென்மதி நிலுவையில் பாதகமான போக்கு ஏற்பட ஏதுவாகின்றது.

8. பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படும் போது விவசாயிகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என நோக்குதல் வேண்டும்.

9. பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படும் போது நாட்டின் சேமிப்பு மட்டத்தில் ஏற்படும் தாக்கத்தினை நோக்குதல் வேண்டும்.

10. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுகின்ற போது வருமான பங்கீட்டில் ஏற்றத் தாழ்வு அதிகரிக்கின்றது.

11. பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவும் போது நாட்டின் அபிவிருத்தி மட்டம் பாதிக்கப்படுகின்றது.

12. பொருளாதாரத்தில் பொருட்கள் தட்டுப்பாடு, பொருள்களின் தரம் வீழ்ச்சியடைதல், கறுப்புச் சந்தை தோன்றுதல் போன்றன ஏற்பட ஏதுவாக அமையும்.

13. அரச உத்தியோகத்தர் பணவீக்கம் காரணமாக எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என நோக்குதல் வேண்டும்.

ந. யோகரூபன்
ஆண்டு 13 (வர்த்தகம்)

---

''சிக்கலான சூழ்நிலையில் அல்லது புதியதொரு
சூழ்நிலையில் ஓர் உயிரி தன்னைத்தானே
தக்கதாக அமைத்துக் கொள்ளல் அதாவது
பொருத்தமான எதிர்வினையைத் தோற்றுவித்தற்றிறனே
நுண்மதி

— பிரான்சிஸ் கோல்ரன்

## ஆசிரியர்

அன்புமிக்க ஆசான்
அறிவுமிக்க ஆசான்
இன்பந்தரும் பாடங்கள்
இயம்பும் எங்கள் ஆசான்
நல்ல நல்ல கதைகளைச்
சொல்லித்தரும் ஆசான்
வண்ண வண்ண படங்கள்
வரைந்து காட்டும் ஆசான்
தெய்வநெறிக் கதைகள்
சொல்லித்தரும் ஆசான்
எங்கள் ஆசான் நல்லவர்
என்றும் நாங்கள் போற்றுவோம்
எங்கள் ஆசான் வல்லவர்
என்றும் நாங்கள் போற்றுவோம்
மாதா பிதா தெய்வம்
மாண்பு மிக்க ஆசான்
மலரடிகள் தொழுவோம் நாம்.

உ. தனஸ்ரீ
ஆண்டு 3 'A'

''தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

— திருக்குறள்




உயர்தர மாணவர் மன்றம் - 1998

# எம் இணுவை

1. ஈழத் திருநகரின் சென்னி நிகர்
யாழ்நகரின் கண்ணென்றும்
தாவில் புகழ்த் திருவாரூர்த் தலமென்றும்
நாவில் நிறைகன்னி கலைமக ளுறைதரு
கோயிலெனப் புகல்வ தெங்கள் இணுவை
சொல்லில் அடங்காத பெருமைகளைத் தான்சுமந்து
நல்லிணுவை யரின் இனிய வளாய்
இன்பம் பெருகும் பொன் மகளாய்
விளங்கு கின்றாள் இணுவைத் தாய்

2. ஏர் பிடித்துத் துலா மிதித்துச்
சோர்ந்து நிற்கும் தன்மக வுகளை
தென்றலாய் வந்து தினம் தழுவி
அன்புடனே அணைத்திடுவோள் இணுவைத் தென்றல்

3. கோயில் மணிகேட்டுக் கண்விழித்தார்
தெம்புடனே தலை பயிலத்
தொந்திக் கணபதிக்குத் தோப்புக் கரணம்
போட்டு நிற்பார் அப்பாநீ அருள்வா யென்று

4. சிவமணம் கமழும் எங்கள்
சிதம்பரமாம் இணுவையிலே
விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானொடும்
கந்த கணபதி வைரவத் தெய்வங்களை
சிரத்தையுடன் வழிபட்டுச்
சிறப்புடனே நாம் வாழச்
சீராட்டி வைப்பாள்
எங்கள் இணுவைத்தாய்

5. பிரித்தானியர் அன்று வந்து
இணுவைச் சைவந்த னைப்
பிரிக்க எண்ணித் தோற்றகதை
உலகறியும் உம்பருலகறியும்
ஆட்டுத் தோலைப் போர்த்தி எந்தக்

காட்டுப் பூனை கடுஞ்சினமாய் வந்தாலும்
மாண்டுவிடார் இணுவை மக்கள்
மாழவிடார் சைவந்தன்னை
ஆயகலை வளம் பெறவே அருள் செய்வாள் இணுவைத்தாய்

6. கலைக்கு நிகர் இணுவை என்பது
கைலை வரை அறிந்த உண்மை
கைநழுவ விடலாமோ?
இல்லை......... இல்லை.........
கலை வளர்ப்போம் கல்வி பெறுவோம்
இணுவைத் தாயவள்
பெற்ற பெருமை இன்னும்
பெருக்கி மகிழ்ந்திடுவோம்
வாழ்க எங்கள் இணுவை நகர்

ப. ரமேஸ்கண்ணா
ஆண்டு 8 "A"

---

## மனவோட்டம்

சாலைக் கரையினிலே மாலைப் பொழுதினிலே
சார்ந்து மனந்தளர் தன்மையிலே
ஊசித் தடியுடனே நேசக் கரங்களால்
உந்தி நடையிடும் அந்தி முதுமகள்

மொட்டு மலர்ந்தது கட்டு விரிந்தது
முன்னை நிகழ்ச்சிகள் பின்னை அலுத்தன
கண்கள் பனித்தன எண்ணம் மலர்ந்தது
காலக் கடலினில் காட்சி தொடர்ந்தது

பூக்கள் மலர்ந்தன ஈக்கள் தொடர்ந்தன
புன்னகை சேர்ந்தது பூவின் மரத்திலே
பூக்கள் கசந்தன ஈக்கள் உதறின
புன்னகை போனது பூவும் வெளுத்தது

எண்ணிப் பயனிலை முன்னை நிகழ்ச்சியை
என்று உதைத்தது எங்கோ புதுமணம்
என்ன அதிசயம் முன்னைப் புதுநடை
அங்கு நடந்தனன் ஓரிளைஞன்

பாலசுப்பிரமணியம் ஐங்கரன்
ஆண்டு 12 (2000)

## My Self

My name is Jasotha Alaganantham. I am a girl. I live at Inuvil. I am in year four. I go to J / Inuvil Central College. My father is a teacher. My mother stays at home. I have three sisters. My birthday is on the first of March. My hobby is reading. I like English very much.

*Jasotha Alaganantham*
Year 4 "B"

## My Friend

My friend is Hariharan. He is nine years old. He is short and fair. He lives in Inuvil. He is in year four. He goes to J/Inuvil Central College. He has a brother and a sister. He likes to play cricket. He is very clever and he wants to be a doctor. He is my best friend.

*S. Gowreeshan*
Year 4 "B"

## My Sister's doll

My sister has a doll, It's very beautiful. She keeps it very carefully. It can't talk with us. My sister calls it 'Rosy', She loves it very much. She shows it to her friends. She plays with it everyday.

*K. Partheepan*
Year 4 "C"

## Our Principal

The name of our principal is Mr.M. Thirugnanasambanthapillai. He lives at Kokuvil. He comes to school early in the morning. He comes on his bicycle. He is tall and smart in the national dress. Our principal is a very busy person. He is very clever too. He encourages us to learn well. We have got good results in the examination and also in the school level competitions. Our principal is going to retire soon We are very sad. We wish him health happiness and long life.

*P. Ariram*
Year 5 "A"

## The coconut tree

The coconut palm grows well in Sri Lanka. It grows tall and has no branches. It gives us coconuts. It is a very useful palm for man.

The leaves of the coconut tree are used for making fences and roof. The wood of the coconut is used for making furniture and toys. The toddy juice is used for making suger and also a good drink. The king coconut is very sweet and serves as a drink, when we are thirsty. Coconut milk is used to make curries. It makes the curry tasty. Coconut toffee in made from scraped coconuts. Coconut oil is produced from coconut. It is used for frying and to make oil cakes. The fibre of the coconut is used for making ropes, rugs and coir mats. Coconut tree is the "friend" of man.

T. *Sugithan*
Year 6 "B"

## My class room

My classroom is seven. 'A'. It is near the Science laboratory. Our class teacher is Mr. R. Kathirgamanathan. He is very good and kind to us. In our class, there are six boys and twenty five girls. They are very clever. There is a monitor in our class. He is Y. Thayananth. He does his duty well. We have a duty chart in the class room. We follow the duty chart to sweep and clean the classroom, arrange desks and chairs and keep the teacher's table beautiful, My class mates are very cooperative. We like to keep the classroom beautiful and tidy.

S. *Rakulan*
7 "A"

## My Hobby

My hobby is gardening. I have a flower garden infront of my house. I have planted rose, jasmin, lilly and other kinds of flowers. Every day I water the plants. I pull out the weeds and grass and make the flower plots neat. They are beautiful with bright flowers. In the evening, I go round my garden to admire the flowers. Bees and butterflies come to suck honey. My brother helps me to make my garden beautiful. I am happy and proud of my flower garden

*S. Sivasajeetha*
Year 7 "B"

## Some hobbies that I Enjoy

Hobby means something we do during our leisure time. It can be in the form of collecting stamps, gardening, engaging in sports, reading and writing or listening to muisc. Collecting stamps, reading and writing are my selected hobbies.

Collecting stamps is quite a common hobby. By collecting and studying stamps of different countries we get a thorough general knowledge of the world. Personally I learnt a lot about countries from my stamp collection.

I like stamp collection because it is a fascinating way of spending my leisure. I started this hobby when I was 10 years. When I began to collect stamps my mother father and my friends helped me. I have divided the album into defferent sections about birds, transports and animals. Now I have about two thousand stamps.

Reading and writing are the most valuable hobbies a person can have. It was Sir Franis Bacon who said "Reading maketh a fullman" conference a readyman and writing an exactman. This statement is very true. Because it help us to widen our knowledge. But also good entertainment. Reading is an important thing because we can learn a lot about other countries. If we do not have the habit of reading we would be like a frog in the well. Because we wouldn't know anything that is happening outside.

Our success at school mostly depends on reading. A student is not a good reader cannot learn his subjects well. Reading of school textbooks alone is not

